بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6 | இதழ் 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

14 ஜமாதிஸ் ஸானீ 1442 ஹிஜ்ரி கமரி 28 ஸுலஹ் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
28 ஜனவரி 2021

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ ازْدَادُوْا كُفْرًا لَّمْ يَكُنِ اللّٰهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ سَبِيْلًا ۝

நம்பிக்கை கொண்டு பின்னர் நிராகரித்துப் பின்னர் நம்பிக்கை கொண்டு அதன் பின்னரும் நிராகரித்துப் பின்னர் நிராகரிப்பில் (மேலும்) முன்னேறி விடுகின்றவர்களை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். அவர்களுக்கு (ஈடேற்றத்திற்குறிய) எந்த வழியையும் காட்டவும் மாட்டான். (4:138)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**உங்களுக்குள் சகோதரத்துவம் மற்றும அன்பை உருவாக்குங்கள். மேலும் மிருகத்தனத்தையும், கருத்து வேறுபாடுகளையும் விட்டு விடுங்கள். எல்லா வகையான கேலி கிண்டல்களிலிருந்து முற்றிலும் விலகி விடுங்கள். ஏனெனில் ஏளனம் செய்வது மனிதனின் உள்ளத்தை உண்மையிலிருந்து விலக்கி வெகுதூரம் கொண்டு சென்று விடுகின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### உங்களது வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கெள்ளுங்கள்

அசல் விஷயம் என்னவென்றால், இறைவன் தான் நாடுவதை செய்கின்றான். பாலைவனத்தை சோலைவனமாகவும், சோலைவனத்தை பாலைவனமாகவும் மாற்றி விடுகின்றான். பாபுல் நகரத்தை என்ன செய்தான்? எங்கு குடிபெயர மனிதன் திட்டம்தீட்டி இருந்தானோ அது அழிவிற்குள்ளானது. ஆந்தைகளின் தங்குமிடமாக்கி விட்டான். மேலும் எதனை பாழடைந்த இடமாக மாற்ற வேண்டும் என்று மனிதன் விரும்பினானோ அந்த இடத்தை முழு உலகமும் ஒன்றுகூடும் இடமாக்கி விட்டான். எனவே நினைவிற் கொள்ளளுங்கள். இறைவனை விட்டு விட்டு மருந்து மற்றும் திட்டங்களின் மீது நம்பிக்கை கொள்வது மடமையாகும். முற்றிலும் புதுமையான வாழ்க்கையை நாடுங்கள். அதிகமாக பாவமன்னிப்பு கோருங்கள். எவர்கள் (உலக) பணிகளில் மிகவும் மும்முரமாக இருக்கின்றார்களோ அவர்கள் அஞ்ச வேண்டும். உலகப் பணிகளில் மும்முரமாக இருப்பவர்களின் பெரும்பாலான கடமைகள் வீண்போய் விடுகின்றன. எனவே சில முறை சில நேரங்களில் லுஹர் தொழுகையை அஸர் தொழுகையுடனும், மக்ரிப் தொழுகையை இஷா தொழுகையுடனும் சேர்த்து தொழுவது ஆகுமானதாகும்.

அதிகாரிகளிடம் தொழுகைக்கான அனுமதி கேட்டால் அவர்கள் அனுமதி தந்து விடுகின்றனர் என்பதை நான் அறிவேன். உயர் அதிகாரிகள் தங்களுக்கு கீழுள்ள அதிகாரிகளுக்கு வழிகாட்டல் வழங்குகின்றார்கள்.

எனவே தொழுகையை விடுவதற்கு கூறப்படும் காரணங்கள் எல்லாம் பக்குவமற்ற மனப்பான்மையே தவிர வேறொன்றுமில்லை. அல்லாஹ்விற்குரிய உரிமைகளிலும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளிலும் அநீதியிழைக்காதீர்கள்.

### நீங்கள் இறைவனது அன்பர்களாகி விடுங்கள்

காலம் மிகவும் அபாயகரமான காலமாகும். இறைவனின் கோபத்திற்கு அனைவரும் அஞ்ச வேண்டும். அல்லாஹ் நல்லடியார்களைத் தவிர வேறு எவரையும் பொருட்படுத்துவதில்லை. உங்களிடத்தில் சகோதரத்துவம் மற்றும் நேசத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். மேலும் மிருகத்தனத்தையும், கருத்து வேறுபாடுகளையும் விட்டு விடுங்கள். எல்லா வகையான கேலி கிண்டல்களிலிருந்து முற்றிலும் விலகி விடுங்கள். ஏனெனில் ஏளனம் செய்வது மனிதனின் உள்ளத்தை உண்மையிலிருந்து விலக்கி வெகு தூரம் கொண்டு சென்று விடுகின்றது. ஒருவர் மற்றவருடன் கண்ணியத்துடன் நடந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு நபரும் தனது மகிழ்ச்சியை விட தனது சகோதரரின் மகிழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுங்கள். அல்லாஹ்வுடன் ஓர் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவனது கட்டுப்படுதலில் திரும்பி வந்து விடுங்கள். அல்லாஹ்வின் கோபம் பூமியில் இறங்கிக் கொண்டிருக்கிறது. தனது அனைத்து பாவங்களிலிருந்தும் தவ்பா செய்து அல்லாஹ்வின் பக்கம் குனிபவர்தான் அதிலிருந்து தப்பிக்கக் கூடியவராக இருக்கின்றார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 241–243 – 2018 ஆண்டு காதியான் பதிப்பு)

## நபிமொழி

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆ நிகழ்த்திய அற்புதம்

ஹஸ்ரத் ஸைது பின் காலித் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யாவில் இரவிலிருந்து பெய்யத் தொடங்கியிருந்த மழைக்குப் பிறகு எங்களுக்கு சுபுஹ் தொழுகையை தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையை முடித்தவுடன் மக்களை நோக்கி திரும்பினார்கள். உங்களது இறைவன் என்ன கூறியிருக்கின்றான் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ் மற்றும் அவனது தூதர் தான் நன்கு அறிவர் என்று அவர்கள் கூறினர். அப்போது இன்று காலை சிலர் எனது நம்பிக்கையாளர் ஆவர். சிலர் நிராகரிப்பாளர் ஆவர் என்று அல்லாஹ் கூறினான். அல்லாஹ் நம் மீது அருள் செய்தான். அதனால் மழையும் பெய்தது என்று கூறியவர் எனது நம்பிக்கையாளர் ஆவார். மேலும் இன்ன இன்ன நட்சத்திரங்கள் இன்ன இன்ன இடத்தில் வந்ததால் நம் மீது மழை பொழிந்தது என்று கூறியவர் என்னை நிராகரிப்பவரும், நட்சத்திரங்களின் மீது நம்பிக்கை கொண்டவரும் ஆவார் என்று அல்லாஹ் கூறியதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி கிதாப் அல்இஸ்திஸ்கா, 2006 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

**எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், அன்னாரின் மருமகனுமாகிய ஹஸ்ரத் அலீ முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 டிசம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் பற்றியும் கிளர்ச்சியாளர்கள் பற்றியும் கூறப்பட்டது. இது தொடர்பாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் முயற்சிகள் என்னவாக இருந்தன என்பது பற்றி சம்பவங்கள் வரும். அல்லது இப்பொழுது மேற்கொண்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சம்பவங்கள் வரும். அது தொடர்பாக மிக முக்கியமான ஒரு விஷயத்தின் பால் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நீங்களும் சஹாபாவுக்கு ஒப்பானவர்களாவீர்கள். எனவே நான் முஸ்லிம்கள் எவ்வாறு அழிவுக்குள்ளாயினர்? எந்தக் காரணிகள் அவர்களின் அழிவுக்குக் காரணமாயின? என்பவற்றை வரலாற்றிலிருந்து எடுத்துரைக்க விரும்புகிறேன். ஆக நீங்கள் சுதாரித்துக் கொள்ளுங்கள். உங்களில் புதிதாக வந்திருப்பவர்களுக்கு கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யுங்கள். (அதாவது, தர்பிய்யத் சரியாக இருக்க வேண்டும். அவர்களுக்கு மார்க்கக் கல்வி வழங்கப்பட வேண்டும்). ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் எழுந்த குழப்பம் சஹாபாவினால் எழவில்லை. சஹாபா எழுப்பினர் என்று கூறுபவர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. பல சஹாபிகள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் முஆவியா அவர்களுக்கும் எதிராக இருந்தனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்தக் குழப்பத்தைத் தோற்றுவித்தவர்கள் சஹாபா கிடையாது. மாறாக, பிற்காலத்தில் வந்த மக்கள் அதாவது எவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமை கிடைக்கப் பெறவில்லையோ; எவர்கள் அன்னாருடன் அமரவில்லையோ அவர்களே ஆவர் என்று நான் கூறுகிறேன். எனவே நான் உங்கள் கவனத்தை இதன் பால் திருப்புகிறேன். குழப்பத்திலிருந்து தப்புவதற்கான வழியாக இதைக் கூறுகிறேன். அதாவது, அதிகதிகமாக (அப்பொழுது அன்னார் காதியானில் இருந்தார்கள்) காதியான் வாருங்கள். மீண்டும் மீண்டும் வாருங்கள். இவ்வாறு உங்களது ஈமான் புத்துணர்வு பெறட்டும். உங்கள் இறையச்சம் அதிகரித்துக் கொண்டே இருக்கட்டும்.

(அன்வாரே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 171)

அதாவது, தலைமையகத்துடனும் உங்களுக்குத் தொடர்பு இருக்க வேண்டும்; கிலாஃபத்துடனும் உங்களுக்கு தொடர்பு இருக்க வேண்டும்.இது இருக்குமேயானால், சரியான தர்பிய்யத்தும் இருக்கும். இன்றைய நாட்களில் அல்லாஹ் நமக்கு MTA வின் வடிவத்தை வழங்கியுள்ளான். குத்பாக்கள் உலகம் முழுவதும் கேட்கப்படுகின்றன; ஒளிபரப்பப்படுகின்றன. மற்ற நிகழ்ச்சிகளும் காட்டப்படுகின்றன; ஒளிபரப்பப்படுகின்றன. எனவே தர்பிய்யத்திற்கு இது மிகவும் அவசியமாகும். அதுமட்டுமின்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை சுயமாகவும் வாசியுங்கள்; அத்துடன் MTA –வோடும் தொடர்பு வையுங்கள். குறிப்பாக ஜுமுஆ பேருரைகளைக் கண்டிப்பாக MTA மூலமாகக் கேட்டு வாருங்கள். கிலாஃபத்தோடு தொடர்பு நிலைத்திருக்கட்டும். சிறப்பாகிக் கொண்டே செல்லட்டும். அதிகரித்துக் கொண்டே செல்லட்டும்.

ஒட்டகப் போர் நிகழ்வு குறித்து அறிவிப்பில் வருகிறது. ஒட்டகப் போர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு மத்தியில் ஹிஜ்ரி 36 ஆம் ஆண்டு நடைபெற்றது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஓர் ஒட்டகத்தின் மேல் பயணித்தவாறு இருந்தார்கள். இதன் காரணமாகவே இந்தப் போருக்கு ஒட்டகப் போர் என்ற பெயர் பிரபலமானது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்றிருந்தார்கள். அவர்கள் அங்கே தங்கியிருக்கும்போதே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதான செய்தி கிடைத்தது. அவர்கள் உம்ராவை நிறைவேற்றி விட்டு மதீனாவை நோக்கி பயணமானபோது, வழியில் சரஃப் எனுமிடத்தில் உபைத் பின் அபீ சலமா, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டு விட்டதாகவும், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாகவும் மதீனா முனவ்வராவில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல் கொடுத்தார். ஆகவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் வழியிலேயே மக்கா திரும்பிச் சென்று மக்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காகப் பழிவாங்குவதற்காகவும் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும் ஒன்றிணைத்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள் ஆகியோரின் தலைமையின் கீழ் பல மக்கள் ஒன்றிணைந்து விட்டார்கள். இந்தப் படைக்குழு அங்கிருந்து பஸராவை நோக்கி பயணமானது. இந்தப் படைக்குழு அங்கு செல்வதைப் பார்த்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் பஸராவை நோக்கி சென்றார்கள். பஸரா சென்றடைந்ததும், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் நகரவாசிகளுக்குத் தம்மோடு இணைந்து கொள்ள அழைப்பு விடுத்தார்கள். அந்த நகரவாசிகளில் ஒரு பெரும் எண்ணிக்கை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களோடு இணைந்து கொண்டது. ஆனால் ஒரு கூட்டம் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களால் பஸராவின் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டிருந்த உஸ்மான் பின் ஹனீஃப் அவர்களின் கையில் பைஅத் செய்து விட்டது. அப்பொழுது, இரு கூட்டங்களுக்கிடையில் மோதலும் ஏற்பட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படையும் சென்றடைந்து விட்டது. அவர்கள் அருகில் முகாமிட்டார்கள். இரு தரப்பிலிருந்தும் சமரசத்திற்கு வித்திடப்பட்டது. முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பேச்சு வார்த்தைகள் வெற்றியும் பெற்று விட்டன.

ஆனால் சரியாக இரவு நேரத்தில், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையில் ஈடுபட்டிருந்த குழுவின் ஒரு பகுதி, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படையிலும் கலந்திருந்தது. அது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் படையின் மீது தாக்குதல் தொடுத்து விட்டது. அதனால் போர் ஆரம்பமாகியது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒட்டகத்தின் மீது பயணித்திருந்தார்கள். உயிரை அர்ப்பணம் செய்யக்கூடியவர்கள் ஒருவர் பின் ஒருவராக ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டவாறு ஷஹீதாகிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒட்டகத்தின் மீது பயணித்திருக்கும் வரையில் போர் முடிவுக்கு வராது என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். எனவே அன்னார் எப்படியாவது அந்த ஒட்டகத்தை அடித்து வீழ்த்தி விடுங்கள்; ஏனெனில் போர் முடிவது அது விழுவதில் இருக்கிறது என்று போர் வீரர்களுக்கு ஆணையிட்டார்கள்.

இதைக்கேட்டு ஒரு நபர் முன்னோக்கிச் சென்று ஒட்டகத்தின் கால்களில் வாள் வீசினார். அது உட்கார்ந்துவிட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படை ஒட்டகத்தை நாலா புறத்திலிருந்தும் சுற்றி வளைத்துவிட்டது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒட்டகம் விழுந்ததால் ஒட்டக(ப்படை) வீரர்கள் சிதறுண்டு போயினர். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஆயுதங்களைப் போட்டு விடுபவர்கள் அல்லது வீட்டின் கதவை அடைத்துக் கொள்பவர்கள் பாதுகாப்பில் இருப்பர். யாரையும் பின் தொடரக்கூடாது. யாருடைய செல்வத்தின் மீதும் அதைப் போர் செல்வமாகக் கருதி கை வைக்கக்கூடாது என்று அறிவிப்பு செய்ய வைத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படை இந்தக் கட்டளைக்கு செவிசாய்த்தது. ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் இதே போரில் ஷஹீதானார்கள். இது இப்னு அஸீருடைய வரலாற்றிலிருநது எடுக்கப்பட்ட ஒரு பகுதியின் சுருக்கமாகும்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 3 பக்கம் 99,144 – 2003 ஆம்

ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்வதில் இணைந்திருந்த அதே மக்களின் ஒரு கூட்டம், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இரத்தத்திற்குப் பழிவாங்குவதற்காக ஜிஹாதுக்கான அறிவிப்பை செய்யுமாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை ஆயத்தப்படுத்திவிட்டார்கள். ஆக, அவர்கள் இதற்கான அறிவிப்பைச் செய்தார்கள். மேலும் சஹாபாக்களை தமது உதவிக்கு அழைத்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் அன்னாருடன் இணைந்து கொண்டார்கள். இதன் விளைவாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோருடைய படைகளில் போர் நடைபெற்றது. அதாவது, ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் அசல் படையான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் படையில் இருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கும் இடையில் போர் நடந்தது. அது ஒட்டகப் போர் எனப்படுகிறது.

இந்தப் போரின் துவக்கத்திலேயே, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் நாவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு முன்னறிவிப்பைக் கேட்டு விலகி விட்டார்கள்.ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் நான் போரிட மாட்டடேன் என்று சத்தியம் செய்தார்கள். மேலும், தான் விஷயத்தை புரிவதில் தவறிழைத்து விட்டதாக அன்னார் ஒப்புக் கொண்டார்கள். மறுபுறம், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் தனது மரணத்திற்கு முன்னர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் பைஅத் செய்வதற்கு ஒப்புக் கொண்டார்கள்.

கடந்த குத்பாவிலும் இது பற்றி கூறப்பட்டிருந்தது. ஏனெனில் அறிவிப்பில் வருகிறது: அன்னார் காயங்களின் வேதனையால் துடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நபர் அன்னாரை கடந்து சென்றார். அவரிடம், நீர் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று கேட்டார்கள். நான், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று அவர் கூறினார். அதைக் கேட்டு அவர்கள் அவருடைய கையில் தமது கையை வைத்து, உனது கை அலீயுடைய கையாகும். நான் உனது கையில் அலீயிடம் மீண்டும் பைஅத் செய்கிறேன் என்று கூறினார்கள். ஆக மற்ற சஹாபிகளின் கருத்து வேறுபாடுகளுக்கு ஒட்டகப் போரின்போதே தீர்வு ஏற்பட்டு விட்டது. ஆனால் ஹஸ்ரத் முஆவியா அவர்களின் கருத்து வேறுபாடு எஞ்சியிருந்தது. எதுவரையெனில், சிஃப்ஃபைன் போர் நடந்தது.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 485,486)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்தவர்களின் குழு பல்வேறு திசைகளில் பரவிவிட்டது. அவர்கள் தம்மைப் பழியிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக மற்றவர்கள் மீது பழி சுமத்தி வந்தனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முஸ்லிம்களிடம் பைஅத் வாங்கி விட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரிய வந்தபோது, அன்னார் மீது பழி சுமத்த சரியான சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்துவிட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்தவர்களில் சிலர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைச் சுற்றி ஒன்றிணைந்து விட்டார்கள் என்பது சரியாகவே இருந்தது. எனவே, அவர்களுக்குப் பழி சுமத்த சரியான சந்தர்ப்பம் இருந்தது. ஆக அவர்களில் மக்காவை நோக்கி சென்ற கூட்டம், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலைக்குப் பழிவாங்குவதற்காக ஜிஹாதுக்கான அறிவிப்பை செய்யுமாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை ஆயத்தப்படுத்திவிட்டது. அன்னார் அதற்கான அறிவிப்பை செய்தார்கள். மேலும் சஹாபிகளை தமது உதவிக்காக அழைத்தார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் மிக விரைவாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்றவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். விரைவு என்பதற்கு அவர்கள் புரிந்திருந்த அர்த்தம் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பார்வையில் காலச் சூழலுக்குப் புறம்பானதாக இருந்தது. (முதலில்) எல்லா மாநிலங்களுக்கான ஏற்பாடும் ஆகிவிட வேண்டும். அதற்குப் பிறகு கொலையாளிகளுக்கு தண்டனை கொடுப்பதன் பால் கவனம் செலுத்தலாம் என்பது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சிந்தனையாக இருந்தது. ஏனெனில், முதல் முன்னுரிமை இஸ்லாத்தைப் பாதுகாத்தல் ஆகும். கொலையாளிகளின் விவகாரத்தில் தாமதம் ஏற்படுவதில் எந்தத் தவறும் இல்லை. அதேநேரம் கொலையாளிகளை கண்டறிவதிலும் கருத்து வேறுபாடு இருந்தது. எவர்கள் மிகவும் கவலை தோய்ந்த முகத்துடன் எல்லாருக்கும் முன்பாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் வந்து சேர்ந்து விட்டார்களோ; மேலும் இஸ்லாத்தில் பிரிவினை ஏற்படுவது குறித்து அச்சத்தை வெளிப்படுத்தி வந்தார்களோ, அவர்களை குறித்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு இவர்கள் குழப்பத்தை ஆரம்பித்தவர்கள் என்ற சந்தேகம் இயல்பாகவே ஏற்படவில்லை. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அவர்கள் மீது சந்தேகம் இருக்கவில்லை. ஆனால் வேறு சில மக்களுக்கு சந்தேகம் இருந்தது. இந்தக் கருத்து வேறுபாட்டின் காரணமாக ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது வாக்குறுதியிலிருந்து விலகுவதாக நினைத்தார்கள். ஏனெனில் அவர்கள் ஒரு நிபந்தனையின் அடிப்படையில் பைஅத் செய்திருந்தார்கள். அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அந்த நிபந்தனையை நிறைவேற்றவில்லை.

எனவே அவர்கள் ஷரீஅத் ரீதியாகத் தம்மை பைஅத்திலிருந்து விடுபட்டவர்களாக கருதி வந்தனர். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பு அவர்களுக்குக் கிடைத்ததும் அவர்களும் அவர்களோடு சென்று இணைந்து கொண்டார்கள். அனைவரும் ஒன்றுசேர்ந்து பஸராவுக்கு சென்று விட்டார்கள். பஸராவில் மக்கள் அவர்களுடன் இணையாமல் ஆளுனர் தடுத்து வைத்திருந்தார். ஆனால் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் பலவந்தத்தால், ஒரு நிபந்தனைக்குட்பட்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் பைஅத் செய்திருக்கிறார்கள் என்பது மக்களுக்குத் தெரிய வந்தபோது பெரும்பாலான மக்கள் அவர்களுடன் இணைந்து கொண்டார்கள்.

இந்தப் படை குறித்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்தபோது, அவர்களும் ஒரு படையைத் தயார் செய்து, பஸராவை நோக்கி பயணமானார்கள். பஸரா சென்றடைந்ததும் அன்னார் ஒரு நபரை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோரிடம் அனுப்பினார்கள். அந்த நபர் முதலில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு முன் ஆஜரானார். தங்கள் நோக்கம் என்ன? என்று அவர் கேட்டார். எங்கள் நோக்கம் சீர்திருத்தம் மட்டும்தான் என்று அன்னார் பதிலளித்தார்கள். இதற்குப் பிறகு அந்த நபர் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களையும் வரவழைத்தார். நீங்களும் இதனால்தான் போருக்கு இசைந்தீர்களா? என்று கேட்டார். அவர்கள், ஆம் என்று கூறினார்கள். அதாவது சீர்திருத்தத்திற்காக.

அந்த நபர் பதிலளித்தவாறு, உங்கள் நோக்கம் சீர்திருத்தம் என்றால், அதற்கு நீங்கள் மேற்கொண்டிருக்கும் இந்த வழி (உகந்தது) அல்ல. இதன் விளைவோ குழப்பமாகும். இப்போது நாட்டின் நிலைமை எப்படியிருக்கிறதென்றால் ஒரு நபரை நீங்கள் கொன்றால், ஆயிரம் பேர் அவருக்கு ஆதரவாக எழுந்து விடுவார்கள். அவர்களை எதிர்த்துப் போரிடுவீர்களாயின், இன்னும் அதிக மக்கள் அவர்களுக்கு உதவுவதற்காக எழுந்து விடுவார்கள். ஆக இந்தத் தொடர் தொடர்ந்து கொண்டே செல்லும். ஆக சீர்திருத்தம் எதுவென்றால், முதலில் நாட்டை ஒற்றுமையின் கயிற்றால் பிணைக்க வேண்டும். பிறகு தீயவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும். இல்லையெனில், இந்த அமைதியின்மையில் யாருக்கும் தண்டனை கொடுப்பது நாட்டில் குழப்பத்தை அதிகரிக்க வைப்பதாகும். ஆளுமை முதலில் ஏற்பட வேண்டும். முதலில் ஆளுமை நிறைவேற வேண்டும். பிறகு அது தண்டனை கொடுக்கும் என்று கூறினார்.

இந்த விஷயத்தைக் கேட்ட அவர்கள், இதுவே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் நோக்கமென்றால், அவர்கள் வரட்டும்; நாம் அவர்களோடு இணைய தயாராக இருக்கிறோம் என்று கூறினார்கள். இதைக் கேட்ட அந்த நபர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்குத் தகவல் கொடுத்தார். இரு தரப்பு பிரதிநிதிகளும் ஒருவர் மற்றவரைச் சந்தித்தார்கள். போர் செய்வது சரியில்லை; சமரசம் ஏற்பட வேண்டும் என்று தீர்மானமாகிவிட்டது. இந்தச் செய்தி சஹாபாக்களுக்கு அதாவது அப்துல்லாஹ் பின் சபாவின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு; ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்வதில் இணைந்திருந்தவர்களுக்குக் கிடைத்தபோது, அவர்களுக்கு கடுமையான பதற்றம் ஏற்பட்டது. இரகசியமாக, அவர்களின் ஒரு கூட்டம் ஆலோசனைக்காக ஒன்று கூடியது. அவர்கள் ஆலோசித்த பிறகு முஸ்லிம்கள் மத்தியில் சமரசம் ஏற்படுவது நமக்குப் பேரிழப்பாகிவிடும். ஏனெனில் முஸ்லிம்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் வரை தான் நாம் ஹஸ்ரத் உஸ்மானைக் கொன்றதற்கான தண்டனையிலிருந்து தப்பியிருக்க முடியும். சமரசம் ஏற்பட்டு அமைதி நிலவி விட்டால், பிறகு நமக்கு வேறு வழி இருக்காது. எனவே எப்படியானாலும் சமரசம் ஏற்பட விடக்கூடாது என்று தீர்மானித்தனர்.

இதற்குள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் சென்றடைந்து விட்டார்கள். அவர்கள் சென்றடைந்த மறுநாள் அந்தப் பகுதியில், அவர்களுக்கும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களுக்கும் சந்திப்பு நிகழ்ந்தது. சந்திப்பின்போது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், நீங்கள் என்னோடு சண்டையிட படையை ஆயத்தப்படுத்திவிட்டீர்கள். ஆனால் இறைவன் முன் சமர்ப்பிப்பதற்கு

ஏதாவது காரணத்தை தயார் செய்துள்ளீர்களா? நான் உங்கள் அனைவரின் சகோதரனில்லையா? முன்னர் ஒருவர் மற்றவருக்கு ஹராமாக இருந்த இரத்தம் தற்போது என்ன காரணத்தால் ஹலாலாகியுள்ளது? புதிதாக ஏதாவது விஷயம் உருவாகியிருந்தால் கூட சரி! புதிய விஷயம் எதுவுமே உருவாகாபோது, இந்தப் போர் எதற்காக? என்று வினவினார்கள். அப்போது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். நீங்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்யுமாறு மக்களைத் தூண்டிவிட்டீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையில் கலந்து கொண்டவர்கள் மீது சாபமிடுகிறேன் என்று கூறினார்கள்.

இறைவன் மீது ஆணையாக! நீர் அலீயோடு போரிடுவீர். மேலும் நீர் அநீதியிழைப்பவராக இருப்பீர்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்மிடம் கூறினார்களே? உமக்கு நினைவில்லையா? என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். இதைக்கேட்ட ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் தமது படைக்குத் திரும்பிச் சென்றார்கள். நான் ஒருபோதும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களோடு போர் செய்யமாட்டேன் என்று சத்தியம் செய்தார்கள். புரிதலில் தான் தவறிழைத்து விட்டதாக ஒப்புக் கொண்டார்கள்.

இந்தச் செய்தி படையில் பரவியபோது, இனி போர் நடைபெறாது. சமரசம் ஏற்பட்டு விடும் என்று அனைவருக்கும் நிம்மதி ஏற்பட்டு விட்டது. ஆனால் குழப்பவாதிகளுக்குக் கடுமையான பதற்றம் ஏற்பட ஆரம்பித்தது. எவர்கள் குழப்பம் விளைவிக்கயிருந்தார்களோ, அவர்களுக்குப் பதற்றம் ஏற்பட்டிருக்கும் என்பது இயற்கையான விஷயம். அவர்களுக்குப் பதற்றம் ஏற்பட்டது. இரவு ஆன போது? அவர்கள் சமரசத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக இவ்வாறு சூழ்ச்சி செய்தார்கள். அதாவது, அவர்களில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் இருந்தவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் ஆகியோரின் படைகள் மீது இரவு நேர திடீர் தாக்குதலைத் தொடுத்து விட்டார்கள்.

நயவஞ்சகர்கள் பிரிந்து, இருபுறமும் கலந்திருந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தரப்பிலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தரப்பிலும் இரு பிரிவினரும் ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுத்தனர். இதன் விளைவாக ஓர் பதற்றம் உருவானது. ஒவ்வொரு பிரிவும் மற்ற பிரிவு தம்மை ஏமாற்றிவிட்டதாகக் கருதியது. ஆனால் உண்மையில் இது வெறும் சபாயிகளின் ஒரு சதித்திட்டமாக இருந்தது. போர் ஆரம்பித்து விட்ட பிறகு, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், யாராவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்குத் தகவல் கொடுங்கள். ஒருவேளை, அவர்கள் மூலமாக அல்லாஹ் இந்தக் குழப்பத்தை அகற்றிவிடலாம் என்று குரல் கொடுத்தார்கள். ஆக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஒட்டகம் முன்னிறுத்தப்பட்டது. ஆனால் விளைவு இன்னும் மோசமாக வெளிப்பட்டது. தமது சதித்திட்டம் பாழாகிறதே! என்பதைக் குழப்பவாதிகள் பார்த்தபோது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஒட்டகத்தின் மீது அம்பு எய்த ஆரம்பித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உரத்த குரலில், மக்களே! போரைக் கைவிடுங்கள். இறைவனையும் தீர்ப்பு நாளையும் நினைவு கூருங்கள்! என்று கூறினார்கள். ஆனால் குழப்பாவதிகள் தவிர்ந்திருக்கவில்லை. தொடர்ந்து அவர்களின் ஒட்டகத்தின் மீது அம்பு எய்து கொண்டே சென்றனர். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைச் சுற்றி ஒன்று கூடியிருந்த அந்தப் படையோடு பஸரா வாசிகளும் இருந்தனர். அவர்களுக்கு இந்த விஷயத்தைப் பார்த்து கடுமையான சீற்றம் ஏற்பட்டது. உம்முல் மூமினீன் (நம்பிக்கையாளர்களின் தாயார்) அவர்களை அவமதிக்கும் இந்த செயலைப் பார்த்து, அவர்களின் சினத்திற்கு அளவே இருக்கவில்லை. அவர்கள் வாள்களை உருவியவாறு எதிர்ப்படையின் மீது தாக்குதல் தொடுத்தார்கள். இப்பொழுது நிலைமை எப்படியாகிவிட்டது என்றால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஒட்டகம் போரின் மையமாகிவிட்டது. சஹாபாக்களும் பெரும் பெரும் வீரர்களும் அதன் அக்கம் பக்கம் ஒன்று திரண்டுவிட்டார்கள். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக கொலையுண்டார்கள். ஆனால் ஒட்டகத்தின் கடிவாளத்தை அவர்கள் விடவில்லை. ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களோ போரிலேயே கலந்து கொள்ளவில்லை. ஒருபுறம் சென்று விட்டார்கள். ஆனால் ஒரு பேறிழந்தவன், அவர்கள் தொழுது கொண்டிருக்கும்போது அவர்கள் முன்னால் சென்று அவர்களை ஷஹீதாக்கிவிட்டான். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் போர்க்களத்தின் நடுவில், அந்தக் குழப்பவாதிகளின் கைகளால் கொல்லப்பட்டார்கள். போர் மும்முரமாகிவிட்ட பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை இடையிலிருந்து அகற்றி விடாத வரை போர் முடியாது என்பதைப் பார்த்தபோது, சில மக்கள் அவர்களின் ஒட்டகத்தின் கால்களை வெட்டி விட்டார்கள். மேலும் பல்லாக்கை இறக்கி தரையில் வைத்து விட்டார்கள். அப்போதுதான் ஒரு வழியாகப் போர் முடிவுற்றது. இந்த நிகழ்வைப் பார்த்த ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் முகம் கவலையில் சிவந்து விட்டது. ஆனால் என்ன நடந்ததோ அதைத்தவிர வேறு வழியும் இருந்திருக்கவில்லை. போர் முடிவுற்ற பிறகு கொலையுண்டவர்களில் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களின் உடல் கிடைக்கப் பெற்றபோது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மிக அதிகமாக வருந்தினார்கள்.

இந்த அனைத்து நிகழ்வுகளிலும், ஒருபோதும் இந்தப் போரில் சஹாபிகளின் கை இருக்கவில்லை. மாறாக, இந்தத் தீமையும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையாளிகளின் தீமையாகவே இருந்தது. மேலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பைஅத்திலேயே மரணமடைந்தார்கள் என்பதும் தெளிவாக வெளிப்பட்டு விடுகிறது. ஏனெனில் அவர்கள் தமது எண்ணத்திலிருந்து மாறியிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்குத் துணை நிற்பதாக உறுதியளித்து விட்டார்கள். ஆனால் சில தீயவர்களின் கைகளால் கொல்லப்பட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவர்களைக் கொன்றவர்களை சபிக்கவும் செய்தார்கள்.

(அன்வாரே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 198–201)

ஒட்டகப்போர் முடிவுற்ற பிறகு, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்காக அனைத்து சவாரிகளையும், பயணத்திற்குத் தேவையான பொருட்களையும் ஆயத்தப்படுத்தினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை வழியனுப்பி வைக்க தாமே வருகை தந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் செல்ல விரும்பியவர்களை அனுப்பி வைத்தார்கள். எப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் புறப்பட இருந்தார்கோள அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வருகை தந்தார்கள். மேலும் அவர்களுக்காக எழுந்து நின்றார்கள். எல்லா மக்களும் இருக்கும்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மக்களுக்கு முன் வந்து, என் மகன்களே! நாம் சிரமத்தைக் கொடுத்தும் வரம்பு மீறியும் ஒருவர் மற்றவரைக் கோபப்படுத்தி விட்டோம். இனி வருங்காலங்களில், நமது இந்தக் கருத்து வேறுபாடுகள் காரணமாக எவரும் ஒருவர் மற்றவர் மீது வரம்பு மீறக்கூடாது. இறைவன் மீது ஆணையாக! எனக்கும் ஹஸ்ரத் அலீக்கும் நடுவில், ஆணுக்கும் அவருடைய மனைவியின் உறவினர்களுக்கும் நடுவில் பொதுவாக ஏற்படும் விஷயங்களைத் தவிர, (அதாவது சின்னச் சின்ன விஷயங்களை தவிர) ஆரம்பத்திலிருந்தே ஒருபோதும் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எனது நன்மைகளைப் பெறுவதற்கான வழிவகையாவார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், மக்களே! ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் நன்மையான மற்றும் உண்மையான விஷயத்தைக் கூறியிருக்கிறார்கள். எனக்கும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கும் நடுவில் இந்தக் கருத்து வேறுபாடு மட்டும்தான் இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இம்மையிலும், மறுமையிலும் உங்களுடைய கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் தூய துணைவியார் ஆவார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை வழியனுப்பி வைக்க பல மைல்கள் வரை உடன் சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது மகன்களுக்கு, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் செல்லுமாறும் ஒரு நாளுக்குப் பிறகு திரும்பி வருமாறும் ஆணையிட்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 3 பக்கம் 60,61 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நான் தற்போது வாசித்தது தப்ரியுடைய ஆதாரமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகும் உயிர் வாழ்ந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட பிறகு, முஸ்லிம்கள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஒரு குழு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்றவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று கூறியது. அந்தக் குழுவின் தலைவர்களாக ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் இருந்தனர். ஆனால் இன்னொரு குழுவோ, முஸ்லிம்கள் மத்தியில் பிரிவினை ஏற்பட்டு விட்டது; மக்கள் இறக்கவே செய்வார்கள்; எனவே இஸ்லாத்தின் கம்பீரமும் அதன் மகத்துவமும் நிலைபெற்றிருப்பதற்கு, நாம் எல்லாவற்றுக்கும் முதலாக முஸ்லிம்களை ஒன்றிணைக்க வேண்டும். அதற்கு பிறகு நாம் அந்த மக்களுக்குத் தண்டனை கொடுத்துக் கொள்ளலாம் என்று கூறியது. இந்தக் குழுவின் தலைவராக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இருந்தார்கள். இந்தக் கருத்து வேறுபாடு எந்த அளவு அதிகரித்ததென்றால், ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொன்றவர்களுக்கு

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அடைக்கலம் கொடுக்க விரும்புகிறார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களோ, இவர்களுக்குத் தமது சொந்த நோக்கங்கள் அதிகம் முன்னுரிமை வாய்ந்தவையாக இருக்கின்றன; அதாவது உடனடியாகத் தண்டனை வழங்க வேண்டும் என்று இவர்கள் கூறுவது (அதிகம் முன்னுரிமை வாய்ந்தாக உள்ளது). இஸ்லாத்தின் பலனை அவர்கள் கருத்திற் கொள்வதில்லை என்று குற்றஞ்சாட்டினார்கள்.

ஆக கருத்து வேறுபாடு தனது உச்சத்தை எட்டியது. பிறகு அவர்களுக்கிடையில் போரும் துவங்கியது. எத்தகைய போர் எனில், அதில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் படையை வழிநடத்தினார்கள். அவர்கள் ஒட்டகத்தின் மீது அமர்ந்தவாறு மக்களைப் போரிட வைத்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் கூட இந்தப் போரில் கலந்து கொண்டிருந்தார்கள். இரு தரப்புக்கும் மத்தியில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஒரு சஹாபி ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களிடம் வந்து, தல்ஹாவே! உமக்கு நினைவிருக்கிறதா? இன்ன சந்தர்ப்பத்தில் நீரும் நானும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் அமர்ந்திருந்தோம். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தல்ஹாவே! ஒரு காலம் வரும்! நீர் ஒரு படையிலும் அலீ ஒரு படையிலும் இருப்பீர்கள். அலீ உண்மையின் பக்கம் இருப்பார்; நீர் தவறில் இருப்பீர் என்று கூறினார்கள் என்று (அந்த சஹாபி) கூறினார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் இதைக் கேட்ட பிறகு, அவர்களின் கண்கள் திறந்து விட்டன. அவர்கள், ஆம்! எனக்கு இந்த விஷயம் நினைவிற்கு வந்து விட்டது என்று கூறினார்கள். பிறகு அத்தருணமே படையிலிருந்து விலகிச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்று நிறைவேற வேண்டும் என்பதற்காக அவர்கள் போரை விட்டு விட்டுச் சென்று கொண்டிருந்தபோது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படையின் வீரனாக இருந்த ஒரு பேறிந்தவன் அவர்கள் பின்புறமாகச் சென்று அவர்களைக் கத்தியால் குத்தி ஷஹீதாக்கிவிட்டான்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது இடத்தில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களைக் கொன்றவன் தமக்குப் பெரிய பரிசு கிடைக்கப் போவதாகக் கருதி ஒடி வந்து, அமீருல் மூமினீன் (நம்பிக்கையாளர்களின் தலைவர்) அவர்களே! நான் தங்களுக்குத் தங்களுடைய எதிரி கொல்லப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறேன் என்றான். எந்த எதிரி? என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கேட்டார்கள். அமீருல் மூமினீன் அவர்களே! நான் தல்ஹாவைக் கொன்று விட்டேன் என்று அவன் கூறினான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், மனிதனே! நீ நரகத்தில் போடப்படுவாய் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து நானும் உனக்கு நற்செய்தி வழங்குகின்றேன். ஏனெனில், ஒரு முறை நானும் தல்ஹாவும் அமர்ந்திருந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தல்ஹாவே! நீர் ஒருமுறை உண்மை மற்றும் நீதிக்காக இழிவை சகிப்பீர்; உம்மை ஒருவன் கொன்று விடுவான். ஆனால் இறைவன் அவனை நரகில் போட்டு விடுவான் என்று கூறினார்கள்.

(ஆயிந்தா வஹீ கவ்மே இஸ்லத் பாகியேகி ஜோ மாலி வ ஜானி....., அன்வாருல் உலூம் தொகுதி 21 பக்கம் 149,150)

பிறகு சிஃப்ஃபைன் போர் நடந்தது. இதன் நிகழ்வுகள் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இந்தப் போர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் முஆவிய்யா அவர்களுக்கும் மத்தியில் ஹிஜ்ரி 37 ஆம் ஆண்டு நடந்தது. சிஃப்ஃபைன் சிரியாவுக்கும் ஈராக்குக்கும் நடுவில் உள்ள ஓரிடமாகும். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூஃபாவிலிருந்து படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். சிஃப்ஃபைன் சென்றடைந்ததும், அமீர் முஆவியா அவர்களின் தலைமையில் சிரியாவின் படை முன்னரே முகாமிட்டிருப்பதைக் கண்டார்கள். அவர்களின் ஒரு கூட்டத்தினர் ஃபுராத் நதிக்கரை மீது ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், நாங்கள் சண்டையிட வரவில்லை; மாறாக, அமீர் முஆவியா அவர்களோடு உடன்படிக்கை செய்ய வந்துள்ளோம் என்று உறுதியளித்தார்கள். எனினும் அமீர் முஆவியா அவர்கள் உடன்படிக்கை செய்ய விரும்பவில்லை. சிரியாவின் படை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படையை ஃபுராத் நதியிலிருந்து தண்ணீர் எடுப்பதை தடுத்து விட்டது. இதைப் பார்த்த ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது படைக்குத் தாக்குதல் தொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். இவ்வாறு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படை சிரியாவின் படையைப் பின்தள்ளுவதிலும் நதி வரைத் தமக்கு வழி ஏற்படுத்திக் கொள்வதிலும் வெற்றி பெற்று விட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சிரியா மக்களுக்கு ஃபுராத் நதியிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்வதற்கு முழு அனுமதியும் வழங்கியிருந்தார்கள். சிரியா மக்களோ ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைத் தண்ணீர் எடுப்பதை விட்டுத் தடுத்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நதிதின் மீது ஆக்கிரமிப்பு செய்து விட்ட பிறகு, அவர்கள் அம்மக்களைத் தண்ணீர் எடுப்பதை விட்டுத் தடுக்கவில்லை. மாறாக, முழு அனுமதி கொடுத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்தவர்களைத் தம்மிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்பது அமீர் முஆவியா அவர்களின் வற்புறுத்தலாக இருந்தது. ஒருமுறை போர் மூண்டு விடும் அபாயம் ஏற்பட்டபோது, இருபுறத்து சமாதான விரும்பிகளும் தடுத்து நிறுத்தி விட்டார்கள். போர் ஹிஜ்ரி 37 ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் துவங்கியது. போருக்கு முன்னர் மோதல்கள் ஏற்பட்டு கொண்டிருந்தன. ஆனால், இரு பிரிவும் பொதுவான போரின் அழிவை உண்டாக்கும் விளைவுகள் குறித்து அச்சம் கொண்டதன் காரணமாகத் தவிர்த்து வந்தார்கள். சமரசத்திற்கான எல்லா சாத்தியமான வழிகளையும் தக்க வைக்கும் நோக்கத்தில், இரு சாராரும் கண்ணியமான மாதங்களில், தற்காலிக சமரசம் செய்து கொள்ளலாம் என்ற விஷயத்தில் உடன்பட்டுவிட்டார்கள். ஆனால் இந்தத் திட்டமும் வெற்றி பெறவில்லை. ஆக ஸஃபர் மாதத் துவக்கத்தில் மீண்டும் போர் நடைபெறுவதற்கான அறிவிப்பு முறையாக செய்யப்பட்டது.

சிறிது காலம் வரை, நிச்சய தீர்மானமின்றி போர் நடந்து வந்தபோது, அமீர் முஆவியா அவர்களின் தைரியம் குன்றி விட்டது. இந்த அபாயகரமான நிலையில் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள், அவர்களுக்குத் திருக்குர்ஆனின் பிரதிகளை ஈட்டிகளின் முனையில் கட்டி, இந்த மறைக்கு ஏற்ப தீர்மானிக்கப்பட வேண்டும் என்று கூறுமாறு ஆலோசனை வழங்கினார்கள். ஆக, அவ்வாறே செய்யப்பட்டது. இதன் விளைவாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பின்பற்றுபவர்களில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டது. அல்லாஹ்விடம் தீர்மானம் வேண்டும் கோரிக்கையை நிராகரிக்க முடியாது என்று ஒரு பெரும்பான்மை பிரிவு கூறிவிட்டது.

இவ்வாறு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் படையின் முன்னோக்கிச் சென்ற படைப்பிரிவைத் திரும்ப அழைத்துக் கொண்டார்கள். போர் நின்று விட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படையின் பெரும்பான்மை, இரு பிரிவும் ஒரு நீதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அந்த நீதிபதிகள் இருவரும் இணைந்து திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கு ஏற்ப ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும் என்ற அமீர் ஆவியா அவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டது. வரலாற்று நூல்களில் இந்த நிகழ்வு தஹ்கீம் எனப்படுகிறது. எவ்வாறிருப்பினும், சிரியா மக்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களை நியமனம் செய்தார்கள். ஒப்புதல் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பிறகு, படைகள் கலைந்து சென்று விட்டன. இது இப்னு அஸீர் எனும் வரலாற்று நூலின் ஆதாரமாகும்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 3 பக்கம் 161–201 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்தப் போரில் ஹஸ்ரத் முஆவியா அவர்களின் தோழர்கள் ஒரு சாதுரியத்தை மேற்கொண்டனர். அதாவது ஈட்டிகளில் திருக்குர்ஆனை ஏந்தி, திருக்குர்ஆன் என்ன தீர்ப்பு கூறுகிறதோ அது எங்களுக்கு சம்மதம்; இந்த நோக்கத்திற்காக நீதிபதி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கூறினர். இதைக் கேட்டவுடன், ஹஸ்ரத் உஸ்மான் (ரலலி) அவர்களைக் கொலை செய்யும் சதித்திட்டத்தில் கலந்திருந்த அதே குழப்பவாதிகள், அன்னாருடைய ஷஹாதத்திற்குப் பிறகு உடனேயே தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் இணைந்து விட்டவர்கள், இவர்கள் முற்றிலும் சரியாகக் கூறுகிறார்கள். தாங்கள் தீர்ப்புக்காக நீதிபதியை நியமித்து விடுங்கள் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மிகவும் மறுத்தார்கள். ஆனால் அந்த(க் குழப்பவாதி) மக்களும் அவர்களின் இந்த ஏமாற்று வலையில் விழுந்து விட்ட சில பலவீனமான இயல்புடைய மக்களும், தாங்கள் நீதிபதியை நியமியுங்கள் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வற்புறுத்தினார்கள். ஆக முஆவியா அவர்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி அவர்களும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்.

உண்மையில், இந்த தஹ்கீம் (அதாவது, நீதிபதிகள் நியமிக்கப்பட்டது) ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலை நிகழ்வு குறித்து இருந்தது. மேலும் திருக்குர்ஆனுக்கு ஏற்ப தீர்ப்பளிக்கப்படும் என்ற நிபந்தனை இருந்தது. அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கொல்லப்பட்ட அந்த நிகழ்வு தொடர்பாகத் தீர்ப்பு கூறப்படும். இந்த நீதிபதிகள் இதற்காகவே நியமிக்கப்பட்டனர். மேலும் யார் கொலையாளிகளோ அவர்களுக்குத் தண்டனை கொடுப்பது அல்லது அவர்களைப் பிடிப்பது தொடர்பாகத் திருக்குர்ஆனுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும் என்றிருந்தது. ஆனால் அம்ர் பின் ஆஸ் அவர்கள் மற்றும் அபூ மூஸா அஷ்அரி ஆகிய இருவரும்

கலந்தாலோசித்து என்ன தீர்மானித்தார்கள் என்றால், முதலில் நாம் இருவரையும் அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களையும், அமீர் முஆவியா அவர்களையும் தலைமைப் பதவிகளிலிருந்து பதவி நீக்கம் செய்ய வேண்டும். அதுவே சிறந்ததாக இருக்கும் என்று தீர்மானித்தார்கள். இந்த தஹ்கீம் அதாவது நீதிபதிகள் நியமிக்கப்பட்டது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கொலை நிகழ்வுக்குத் தீர்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக இருந்தது.

ஆனால் இங்கு நியமிக்கப்பட்டிருந்த இரு நீதிபதிகளும், முதலில் இருவரையும் பதிவி நீக்கம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு தான் விஷயம் நடக்கும். ஏனெனில் முஸ்லிம்கள் அனைவரும் இந்த இருவரின் காரணமாக குழப்பத்தில் மூழ்கிக் கொண்டே செல்கின்றனர் (இது இவர்கள் இருவரின் சிந்தனையாக இருந்தது) பிறகு சுதந்திரமான முறையில் முஸ்லிம்களை ஏதாவது தீர்மானிக்க அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தாம் விரும்புபவரை கலீஃபாவாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து விட்டார்கள். ஆனால் அவர்களோ இந்தப் பணிக்காக நியமிக்கப்படவேயில்லை. எந்த விஷயம் தொடர்பாக இந்த நீதிபதிகள் சிந்தித்திருந்தார்களோ அந்த விஷயமே தவறாக இருந்தது. ஏனெனில் அவர்கள் இந்தப் பணிக்காக நியமிக்கப்படவில்லை.

எவ்வாறிருப்பினும், அவர்கள் இருவரும் அந்தத் தீர்ப்பை அறிவிப்பதற்காக ஒரு பொதுக்கூட்டத்தை கூட்டினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் அபூ மூஸா அஷ்அரி அவர்களிடம், முதலில் நீங்கள் உங்கள் தீர்ப்பை அறிவித்துவிடுங்கள். பிறகு நான் அறிவிப்பேன் என்று கூறினார்கள். ஆக ஹஸ்ரத் அபூ மூஸா அவர்கள் தாம் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கிலாஃபத்திலிருந்து பதிவி நீக்கம் செய்வதாக அறிவித்து விட்டார்கள். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் எழுந்து, அபூ மூஸா அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை பதவி நீக்கம் செய்து விட்டாக்ரள்., நானும் அவர்களின் இந்த விஷயத்தில் ஒருமித்து, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை கிலாஃபத்திலிந்து பதவி நீக்கம் செய்கிறேன். ஆனால் முஆவியா அவர்களை நான் பதவி நீக்கம் செய்யவில்லை. மாறாக, தலைமைப் பதவியிலேயே அவர்களை இருக்க வைக்கிறேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் சுயமே மிக நல்ல மனிதராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஆனால் இப்பொழுது, ஏன் அவர்கள் இவ்வாறு தீர்மானித்தார்கள்? என்ற விவாதத்திற்கு நான் செல்லவில்லை. எவ்வாறிருப்பினும் நல்லவராக இருந்தும்கூட, அத்தருணத்தில், அவர்கள் மக்களின் பேச்சில் சிக்கிவிட்டார்களா? அல்லது என்ன நடந்தது? என்பது ஒரு தனி தலைப்பாகும். எனவே இந்த விவாதத்திற்குள் செல்லவில்லை. ஆனால் எவ்வாறிருப்பினும் அவர்களின் தீர்ப்பு தவறாக இருந்தது. இந்தத் தீர்ப்பைக் கேட்ட முஆவியா அவர்களின் தோழர்கள், நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு பதிலாக முஆவியா அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். மேலும் இது சரியாகும் என்று கூற ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், நீதிபதிகள் இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்படவுமில்லை; மேலும் அவர்களின் இந்தத் தீர்ப்பு திருக்குர்ஆனின் எந்தக் கட்டளையின் அடிப்படையிலுமில்லை என்று கூறி இந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்து விட்டார்கள்.

இதைக் கேட்டதும், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை, நீதிபதிகளை நியமிக்குமாறு அழுத்தம் கொடுத்த அதே நயவஞ்சக இயல்பையுடைய உடனிருந்த நபர்கள், மார்க்க விஷயங்களில் எந்த நீதிபதியும் இருக்கவே முடியாதபோது, நீதிபதிகள் நியமிக்கப்பட்டது எதற்காக? என்று கூச்சலிட ஆரம்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பதிலளித்தவாறு, முதலில் அவர்களின் தீர்ப்பு திருக்குர்ஆனுக்கு ஏற்ப இருக்கும் என்ற விஷயம் உடன்படிக்கையில் இருந்தது. அதை அவர்கள் பேணவில்லை. அதாவது திருக்குர்ஆனுக்கு ஏற்ப தீர்ப்பு வழங்கப்படவில்லை. இரண்டாவது விஷயம், நீதிபதிகள் உங்களுடைய வற்புறுத்தலின் காரணமாகவே நியமிக்கப்பட்டனர். இப்பொழுது நான் எதற்காக நீதிபதியை நியமித்தேன்? என்று நீங்கள் கேட்கின்றீர்கள் என்று கூறினார்கள்.

அவர்கள், நாங்கள் முட்டாள்தனம் செய்துவிட்டோம். நாங்கள் உங்களிடம் என்ன கூறினோமோ அது எங்கள் தவறாக இருந்தது. ஆனால் கேள்வி என்னவென்றால், நீங்கள் ஏன் இந்த விஷயத்தை ஏற்றீர்கள்? என்று கேட்டனர். இதன் பொருள் என்னவென்றால், (கிளர்ச்சியாளர்களாகவும் நயவஞ்சகர்களாக இருந்தவர்கள் கூறியதன் பொருள் என்னவென்றால்,) நாங்களும் குற்றவாளிகளாகி விட்டோம். நீங்களும் (குற்றவாளி) ஆகிவிட்டீர்கள். நாம் இருவரும் சமமாகி விட்டோம். நாங்களும் குற்றமிழைத்தோம். நீங்களும் (குற்றமிழைத்தீர்கள்). இப்பொழுது நாங்கள் எங்கள் தவறிலிருந்து தவ்பா செய்து விட்டோம். நீங்களும் தவ்பா செய்யுங்கள். மேலும் நீங்கள என்ன செய்தீர்களோ அது தகாத செயலாக இருந்தது என்று ஒப்புக் கொள்ளங்கள். அதுவே பொருத்தமானதாக இருக்கும் என்பதாகும்.

இதன் மூலம் அவர்களின் நோக்கம், ஒருவேளை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மறுத்துவிட்டால், அவர்கள் இஸ்லாத்திற்குப் புறம்பான ஒரு செயலை செய்துள்ளார்கள். எனவே நாங்கள் அவர்களிடம் பைஅத்தின்கீழ் இருக்க முடியாது என்று கூறி அன்னாரிடம் செய்த பைஅத்திலிருந்து விலகிவிடலாம் என்றிருந்தது.

ஒருவேளை அன்னார் தமது தவறை ஒப்புக் கொண்டால் அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மறுத்து விட்டால், அவர்கள் இஸ்லாத்திற்குப் புறம்பான ஒரு செயலை செய்திருக்கிறார்கள்; எனவே நாங்கள் அவர்களின் பைஅத்திலிருக்க முடியாது என்று கூறி பைஅத்திலிருந்து விலகி விடுவோம். ஒருவேளை அன்னார் தமது தவறை ஒப்புக் கொண்டு, நான் தவ்பா செய்கிறேன் என்று கூறினால், அப்பொழுதும் அவர்களின் கிலாஃபத் பொய்யாகிவிடும். ஏனெனில் எந்த நபர் இவ்வளவு பெரிய குற்றத்தை செய்து விட்டாரோ அவர் எவ்வாறு கலீஃபாவாக இருக்க முடியும்? (என்பது அவர்களின் நோக்கமாக இருந்தது).

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டபோது, நான் எந்தத் தவறும் செய்யவில்லை. எந்த விவகாரம் தொடர்பாக நான் நீதிபதிகளை நியமனம் செய்தேனோ, அதில் யாரையாவது நீதிபதிகளாக நியமிப்பது இஸ்லாமிய ஷரீஅத் அடிப்படையில் ஆகுமானதாகும். மற்றபடி, நான் நீதிபதி நியமிக்கும்போது, அவர்கள் என்ன தீர்மானித்தாலும் அது திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸுக்கு ஏற்ப இருக்குமெனில், நான் அதை ஏற்பேன்; இல்லையெனில், நான் அதை எந்நிலையிலும் ஏற்க மாட்டேன் என்ற தெளிவான நிபந்தனை இருந்தது. அவர்கள் இந்த நிபந்தனையை கருத்திற் கொள்ளவுமில்லை; மேலும் எந்த நோக்கத்திற்காக அவர்கள் நியமிக்கப்பட்டார்களோ அது தொடர்பாக அவர்கள் எந்த தீர்ப்பும் அளிக்கவில்லை.

எனவே எனக்கு அவர்களின் தீர்ப்பு எவ்விதத்திலும் சான்றாகாது என்று கூறினார்கள். ஆனால் அவர்களோ ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் இந்தக் காரணத்தை ஏற்காமல், பைஅத்திலிருந்து அகன்று காரிஜ்கள் – வெளியேறியவர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆனால் கட்டாயமாகக் கட்டுப்பட வேண்டிய கலீஃபா யாருமில்லை; முஸ்லிம்கள் பெரும்பான்மையின் தீர்மானத்திற்கு ஏற்ப அமல் செய்யப்படும்; ஏனெனில் யாராவது ஒரு நபரைக் கட்டாயமாகக் கட்டுப்பட வேண்டிய அமீராக ஏற்றுக் கொள்வது لَا حُكْمَ اِلَّا لِلّٰہِ (அல்லாஹ்வைத் தவிர தீர்ப்பு அதிகாரம் யாருக்குமில்லை) என்பதற்கு முரணானதாகும் என்ற கொள்கையை மேற்கொண்டனர்.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 486–488)

நஹர்வான் போர் ஹிஜ்ரி 38 ஆம் ஆண்டு நடந்தது. நஹர்வான் பாக்தாத் மற்றும் வாசஸித்தாவுக்கு நடுவில் அமைந்துள்ளது. அந்த இடத்தில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் காரிஜ்களுக்கும் – வெளியேறியவர்களுக்கும் மத்தியில் போர் நடந்தது.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 5 பக்கம் 375 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு அஸீர் வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: சிஃப்ஃபைன் போருக்கு உடன்பாடு செய்வதற்காக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி அவர்களும் அமீர் முஆவியா அவர்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களும் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். வரலாற்றில் இந்த நிகழ்வு தஹ்கீம் எனப்படுகிறது. தஹ்கீம் விவகாரத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களோடு அவர்களின் படையின் ஒரு குழு கருத்து வேறுபாடு கொண்டு, கிளர்ச்சி செய்து, பிரிந்து, காரிஜ்கள் – வெளியேறியவர்கள் என்று அழைக்கப்பட்டது. அந்த காரிஜ்கள் – வெளியேறியவர்கள் தஹ்கீம் விவகாரத்தைக் குற்றமாக கூறி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் தவ்பா செய்யுமாறும் கிலாஃபத்திலிருந்து பதவி விலகுமாறும் கோரிக்கை விடுத்தபோது அன்னார் தெளிவாக மறுத்து விட்டார்கள். ஏன் மறுத்தார்கள் என்பதற்கான விளக்கம் முன்னரே வந்து விட்டது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அமீர் முஆவிய்யாவுக்கு எதிராக மீண்டும் ரோம் நாட்டை நோக்கி முன் செல்லும் ஏற்பாட்டில் மும்முரமாகியிருந்தபோது, காரிஜ்கள் – வெளியேறியவர்கள் குழப்ப வேலைகளை ஆரம்பித்துவிட்டனர். அவர்கள் அப்துல்லாஹ் பின் வஹபைத் தமது தலைவராக்கி, கூஃபாவிலிருந்து நஹர்வானை நோக்கி சென்று விட்டார்கள். காரிஜ்கள் – வெளியேறியவர்கள் பஸராவிலும் தமது படைக்குழுவை ஒன்றுதிரட்டினார்கள். அதற்குப் பிறகு அது, நஹர்வானில் அப்துல்லாஹ் பின் வஹபின் படையோடு சென்றிணைந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சஹாபியான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் கப்பாப் (ரலி)

அவர்களை, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு சாதகமாக இருந்ததன் காரணமாகக் கொன்று விட்டார்கள். அவர்களின் கர்ப்பிணி மனைவியின் வயிற்றைக் கிழித்து மிகவும் இரக்கமற்ற முறையில் அவர்களையும் கொன்று விட்டார்கள். தே கோத்திரத்தின் மூன்று பெண்களையும் கூட கொன்று விட்டார்கள். இந்த நிலைமைகள் (குறித்த தகவல்) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வரை எட்டிய போது, அன்னார் ஆய்வு செய்வதற்காக ஹாரிஸ் பின் முர்ராவை தூதராக அனுப்பினார்கள். அவர் அவர்களிடம் சென்றபோது – காரிஜ்கள் (வெளியேறியவர்கள்) அவரையும் கொன்று விட்டார்கள். இந்த நிலைமைகளைப் பார்த்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சிரியா செல்லும் எண்ணத்தை கைவிட்டார்கள். சிரியாவுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருந்த ஏறத்தாழ 65000 பேரைக் கொண்ட படையை அழைத்துக் கொண்டு காரிஜ்களை (வெளியேறியவர்களை) எதிர்த்துப் போரிடச் சென்றார்கள். அன்னார் நஹர்வான் பகுதியை அடைந்ததும் காரிஜ்களுக்கு – வெளியேறியவர்களுக்கு சமரச அழைப்பு விடுத்தார்கள்.

அன்ஸாரி சஹாபியான ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்களிடம் கொடியைக் கொடுத்தார்கள். எவர் அதன் அடைக்கலத்தில் வருவாரோ அவரோடு போர் புரியப்பட மாட்டாது (என்று அறிவித்தார்கள்). இந்த அறிவிப்பைக் கேட்டு, 4000 பேரிந்த காரிஜ்களிலிருந்து (வெளியேறியவர்களிலிருந்து) 100 பேர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் இணைந்து கொண்டனர். ஒரு பெரும் எண்ணிக்கை கூஃபாவுக்கு திரும்பிவிட்டது. 1800 பேர் மட்டும் காரீஜீ (வெளியேறிய) அப்துல்லாஹ் பின் வஹப் தலைமையில் முன்னோக்கி வந்தனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் 65000 பேர் கொண்டை படையுடன் போர் நடந்தது. அதில் காரிஜ்களின் (வெளியேறியவர்களின்) சொற்ப எண்ணிக்கை, பத்திற்கும் குறைவாக இருந்தது. தப்ப முடிந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் படையிலிருந்து ஏழு பேர் ஷஹீதானார்கள்.

(அல்காமில் ஃபித்தாரீக் தொகுதி 3 பக்கம் 212–223 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உம்ரா பின்த் அப்திர் ரஹ்மான் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பஸராவை நோக்கி பயணமானபோது, வழியனுப்பும் சந்திப்புக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய துணைவியாரான ஹஸ்ரத் உம்மே சலமா (ரலி) அவர்களிடம் வந்தார்கள். தாங்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பிலும், அமைதியிலும் செல்லுங்கள் என்று அன்னார் கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், தாங்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பிலும், அமைதியிலும் செல்லுங்கள். இறைவன் மீது ஆணையாக! நிச்சயமாக தாங்கள் உண்மையில் நிலைநிற்கின்றீர்கள். உண்மை தங்களோடு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு வீட்டில் இருக்குமாறு ஆணையிட்டுள்ளார்கள். எனவே அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்குக் கட்டுப்படாமை என்பதற்கான அச்சம் இல்லாமலிருந்திருந்தால், நான் தங்களோடு வந்திருப்பேன். ஆனால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! எவ்வாறிருப்பினும், நான் எனது மகன் உமரைத் தங்களோடு அனுப்பி வைக்கிறேன். அவர் எனது பார்வையில் எல்லாரையும் விடச் சிறந்தவர். அவர் எனக்கு என்னுடைய உயிரைக் காட்டிலும் அன்பானவர்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 129, ஹதீஸ் எண் 4611 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இந்தக் குறிப்பு இன்னும் தொடர்கின்றது. இனி அடுத்த வாரமும் நடைபெறும். இன்ஷா அல்லாஹ்.

இன்றும் நான் பாகிஸ்தான் மற்றும் அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காக துஆவிற்கு கூற விரும்புகிறேன். அல்ஜீரியா குறித்து ஒரு மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தி இருக்கிறது. கடந்த இரண்டு மூன்று நாட்களில் இருவேறு நீதிமன்றங்கள் பொய்யான வழக்கில் சிக்கியிருந்த பல அஹ்மதிகளை விடுவித்து விட்டன. அல்லாஹ் இந்த நீதமான இயல்புடைய நீதிபதிகளுக்கு வெகுமதி வழங்குவானாக. அஹ்மதிகள் மீது பொய் வழக்குகள் தொடுத்துக் கொண்டிருக்கும் மற்ற நிர்வாகங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் நீதியோடு செயல்படுவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக.

பாகிஸ்தானின் சில அதிகாரிகளும் நீதிபதிகளும் நீதி தவறுகின்றனர். தமது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தமது உள்ளப் பகைமையையும் காழ்ப்புணர்ச்சியையும் வெளியேற்றிவிட்டு விவகாரங்களைப் பார்க்கக் கூடியவர்களாவதற்கு அல்லாஹ் அவர்களுக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. எவர்களின் சீர்திருத்தம் அல்லாஹ்வின் பார்வையில் நிர்ணயிக்கப்படவில்லையோ, அல்லாஹ் அவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை விரைவில் செய்வானாக. பாகிஸ்தானிலும் அஹ்மதிகளுக்கு அமைதி மற்றும் நிம்மதிக்கான வழியை ஏற்படுத்துவானாக. பாகிஸ்தானைச் சேர்ந்த அஹ்மதிகள், பாகிஸ்தானில் வசிக்கக்கூடிய அஹ்மதிகள் குறிப்பாக நஃபில்கள் மற்றும் துஆக்களில் அழுத்தம் கொடுங்கள்.

அந்த துஆக்களில் رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِي وَانْصُرْنِي وَارْحَمْنِي எனும் துஆவையும் அதிகமாக ஓதுங்கள்.

اَللّٰهُمَّ إِنَّا نَجْعَلُكَ فِي نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ எனும் துஆவையும் அதிகமாக ஓதுங்கள்.

பாவமன்னிப்பு கோருவதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். ஸலவாத் ஓதுவதன் பாலும் கவனம் செலுத்துங்கள். இன்றைய நாட்களில் இதன் தேவை அதிகம் உள்ளது. நான் கூறியதுபோன்று, நஃபில்களையும் நிறைவேற்றுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு நல்வாய்ப்பும் வழங்குவானாக! விரைவில் அங்குள்ள நிலைமைகளையும் சீர்படுத்துவானாக!

இன்றும் நான் தொழுகைகளுக்குப் பிறகு சிலருடைய ஜனாஸா தொழுகையை நடத்துவேன். அதில் முதல் ஜனாஸா மதிப்பிற்குரிய ஹுந்தா அப்பாஸ் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் கைர் பூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்பாஸ் பின் அப்தில் காதிர் சாஹிப் ஷஹீத் அவர்களின் துணைவியாராவார்கள். டிசம்பர் 29 அன்று தனது 91 வயது வயதில் இறை நியதிக்கு ஏற்ப வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களின் தந்தை டாக்டர் முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்கள் கிங் அட்வேர்ட் மருத்துவக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த காலத்தில் 1926 இல் தமது அஹ்மதி வகுப்புத் தோழரால் தாக்கமடைந்து, தமது துணைவியாருடன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கைகளில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். 1951 மே மாதம், லாஹூரில் புரொஃபசர் அப்பாஸ் பின் அப்தில் காதர் சாஹிப் அவர்களுடன் ஹுந்தா சாஹிபா அவர்களுக்குத் திருமணம் நடைபெற்றது. (கணவர்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மவ்லானா அப்துல் மாஜித் சாஹிப் அவர்களின் மகன்வழி பேரராவார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் துணைவியார் ஹஸ்ரத் சய்யிதா சாராஹ் பேகம் சாஹிபா அவர்களின் அண்ணன் பேராசிரியர் அப்துல் காதிர் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 1974 இல் இவர்களின் கணவர் பேராசிரியர் (அப்பாஸ் பின்) அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் கைர்பூரில் ஷஹீதாக்கப்பட்டார்கள். மிகவும் மேலான பொறுமையோடு அவர்கள் செயல்பட்டார்கள். எந்தப் பொறுமையின்மையையும் வெளிப்படுத்தவில்லை. அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தியடைந்தார்கள். இவர்களின் கணவர் ஷஹீதாக்கப்பட்டபோது இவர்களின் தாயாரின் சகோதரிவழி ஜமாஅத் அல்லாத சகோதரர் இரங்கல் கடிதத்தில், அப்பாஸ் மிக நல்ல மனிதராக இருந்தார்; அவருடைய முடிவும் நேர்வழியில் இருந்திருக்கக் கூடாதா! என்று எழுதினார். ஹுந்தா சாஹிபா அவர்கள் அவருக்கு, எந்த வழியில் எனது கணவர் உயிரை விட்டாரோ அது நேர்வழி என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன் என்று பதில் எழுதினார்கள்.

பிறகு ஹுந்தா சாஹிபா அவர்களின் பள்ளிப் பருவத்தின் ஒரு நெருங்கிய தோழி ஷஃபீகா சாஹிபா இருந்தார்கள். அவர்கள் தற்செயலாக பாகிஸ்தானின் அதிபர் ஸியாவுல் ஹக் சாஹிபின் மனைவியானார்கள். அவர்கள் ஒரு முறை தனது கணவர் அதிபனரான பிறகு, அனைவரும் என்னை சந்திக்க வருகின்றனர். ஆனால் ஹுந்தா வருவதில்லை! என்று கூறினார்கள். அதாவது, ஸியாவுல் ஹக் சாஹிபின் மனைவி கூறினார்கள். ஹுந்தா சாஹிபா அவர்களுக்கு இது தெரியவந்தபோது அவர்கள் இதைக்கேட்டு விட்டு, என்னுடைய அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோடும், அன்னாரின் ஜமாஅத்தோடும் பகைமைக் கொண்டிருக்கும் இத்தகைய நபரின் மனைவியை சந்திக்க எனக்கு எந்த ஆசையும் இல்லை என்று கூறினார்கள். பிறகு ஒருபோதும் அவர்களை சந்திக்கவே இல்லை. இவர்கள் எண்ணற்ற சிறப்புகளுக்குரியவர்களாக இருந்தார்கள். நுட்பமான தன்மைகளை மிகவும் விரும்புபவராக இருந்தார்கள். கண்ணியமிக்கவராக இருந்தார்கள். மிகவும் நல்ல, கலப்பற்ற பெண்மணியாக இருந்தார்கள். எப்பொழுதும் தொழுகையையும், நோன்பையும் மிகவும் பேணி வந்தார்கள். பிள்ளைகளுக்கும் அதற்கான பழக்கத்தை ஏற்படுத்தினார்கள். சந்தா செலுத்துவதில் மிகவும் விரைவை மேற்கொள்வார்கள். தான தர்மங்கள் செய்வதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பார்கள்.

ரமலான் மாதத்தில் பல மக்களுக்குத் தமது இல்லத்தில் நோன்பு திறப்பதற்கான ஏற்பாடு செய்வார்கள். கிலாஃபத்தோடு அளவற்ற தொடர்பும் அன்பும் நேசமும் இருந்தது. முறையாகத் தனது கைகளால் எனக்குக் கடிதம் எழுதி வந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின்

நூல்களைப் பெரும்பாலும் வாசித்து வருவார்கள். இயக்கத்தின் பிற நூல்கள் மற்றும் அல் ஃபஸ்ல் இதழையும் கடைசி நேரம் வரை வாசித்து வந்தார்கள். 2006ல் இவர்களின் இளைய மகள் டாக்டர் அமீரா அவர்கள் டிராஃபிக் விபத்தில் இரு பிள்ளைகளுடன் வஃபாத் ஆகி விட்டார்கள். இந்த பெருந்துயரத்தை மிகவும் தைரியத்தோடு பொறுத்துக் கொண்டார்கள். பொறுமைமிக்க ஒரு சிறந்த முன்மாதிரியைக் காட்டினார்கள். எல்லா அன்பர்களும் உறவினர்களும் சந்திக்கக் கூடியவர்களும் இவர்களின் எண்ணற்ற நற்பண்புகள் காரணமாக இவர்களுடன் மிகவும் அன்பான தொடர்பு வைத்திருந்தனர். பின்விட்டுச் சென்றவர்களில் மூன்று மகள்களும் இரண்டு மகன்களும் உள்ளனர். அவர்கள் அமெரிக்கா, கனடா மற்றும் நார்வேயில் வசிக்கின்றனர். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் இவர்களின் பிள்ளைகளின் சந்ததிகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக! மர்ஹூமாவின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

அடுத்த ஜனாஸா ஈராக்கைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ரிஸ்வான் சய்யித் நயீமீ சாஹிப் அவர்களுடையதாகும். அவர்கள் நவம்பர் 13 அன்று தமது 70 வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَیۡهِ رَاجِعُوۡنَ

இவர்களின் மகன் முஸ்தஃபா நயீமீ சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: எனது தந்தையார் கனவில் தம்மை சய்யித் அப்துல் காதிர் ஜைலானி (ரஹ்) அவர்களிடம் இருக்கக் கண்டார்கள். அவர்கள் தந்தையாருக்குத் தமது காலணியை வழங்கினார்கள். தந்தையாரோ, நான் சய்யித் அப்துல் காதிர் ஜைலானி (ரஹ்) அவர்களின் காலணியை அணிவதற்கு எனக்கு என்ன தகுதியிருக்கிறது! என்று கூறியவாறு அதை வாங்கத் தயங்கினார்கள். ஆனால், சய்யித் அப்துல் காதிர் ஜைலானி (ரஹ்) அவர்கள் வற்புறுத்தியபோது, தந்தையார் காலணியை அணிந்து கொண்டார்கள். இதற்குப் பிறகு, சய்யித் அப்துல் காதிர் ஜைலானி (ரஹ்) அவர்கள் ஒரு நபரையும் அவருடைய ஜமாஅத்தையும் சுட்டிக் காட்டியவாறு, தந்தையாரை அவர்களுடன் இணையுமாறு அறிவுறுத்தினார்கள். இதற்குப் பிறகு, ரிஸ்வான் அமீனீ சாஹிப் அவர்களுக்குக் கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இதன் பொருள் அன்னாரின் உண்மைத் தொண்டரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த நபரையும் அவருடைய ஜமாஅத்தையும் சுட்டிக் காட்டியவாறு, தந்தையாரை அவர்களுடன் இணையுமாறு கூறினார்களோ, அதன் பொருள் கலீஃபத்துல் மஸீஹ் மற்றும் அவர்களின் ஜமாஅத் ஆகும். ஆக, அவர்கள் 2012ல் பைஅத் செய்து விட்டார்கள்.

மர்ஹூம் அவர்கள் மிகவும் நற்பண்புள்ளவர்களாகவும் நற்செயல் செய்யக்கூடியவர்களாகவும் தமது உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். தப்லீக்கில் மிகவும் ஆர்வம் இருந்தது. உடல் நிலை பலவீனமும் மக்களின் எதிர்ப்பும் இருந்தும் கூட தமது பகுதியில் அஹ்மதிய்யத்திற்கான தப்லீக் செய்து வந்தார்கள். தமது குடும்பத்திற்கு, அவர்கள் விரைவில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணையுமாறு எப்பொழுதும் அறிவுறுத்தி வந்தார்கள். இவர்களின் மகன், துணைவியார் மற்றும் துணைவியாரின் சகோதரர் ஆகியோரும் இப்பொழுது பைஅத் செய்து விட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு உறுதியான பாதத்தை வழங்குவானாக! மர்ஹூம் அவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கு இம்மக்களுக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

அடுத்த ஜனாஸா சர்கோதா மாவட்டத்தின் ஹிஜ்கா பகுதியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மலிக் அலீ முஹம்மது சாஹிப் அவர்களுடையதாகும். அவர்கள் கென்யாவின் முரப்பியான முஹம்மத் அஃப்ஸல் ஸஃபர் சாஹிப் அவர்களின் தந்தையாராவார்கள். ஆகஸ்ட் 20 அன்று தமது 90வது வயதில் இறை நியதிக்கு ஏற்ப வஃபாத் ஆகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَیۡهِ رَاجِعُوۡنَ

1974ல் இவர்களுக்கு இறை வழியில் சிறை செல்லும் நற்பாக்கியமும் கிடைக்கப்பெற்றது. இயக்கத்தின் ஊழியர்கள், வாழ்வை அர்ப்பணித்த முரப்பிகள் மற்றும் முஅல்லிம்மார்களுக்கு அளவற்ற முறையில் கண்ணியம் வழங்கி வந்தார்கள். மர்ஹூம் தஹஜ்ஜுத் தொழக் கூடியவர்களாகவும் தொழுகை மற்றும் நோன்பைக் கடைபிடிக்கக் கூடியவர்களாகவும் மிகவும் விருந்தோம்பல் செய்யக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஏழைகளுக்கு உதவக்கூடியவர்களாகவும், பொறுமையாளராகவும் நன்றி செலுத்தக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். உறவுகளைப் பேணக்கூடியவர்களாக இருந்தார்கள். ஒரு நல்ல, கலப்பற்ற மனிதராக இருந்தார்கள். முறையாகத் திருக்குர்ஆன் ஓதி வந்தார்கள். எண்ணற்ற பிள்ளைகளுக்குத் திருக்குர்ஆன ஓதி கொடுக்கும் நல்வாய்ப்பும் அன்னாருக்கு கிடைத்தது. பின்விட்டுச் சென்றவர்களில் மூன்று மகன்களும், பதினோரு பேரன் பேத்திகளும் உள்ளனர். நான் கூறியதுபோன்று, கென்யாவின் முரப்பியான முஹமமத் அஃப்ஸல் ஸஃபர் சாஹிப் அவர்கள் இவர்களின் மகனாவார்கள். அவர்கள் இன்றைய நாட்களில் அங்கு, கென்யாவில் செயல் களத்தில் இருந்தார்கள். இதன் காரணமாக, இவர்களால் தமது தந்தையின் ஜனாஸாவிலும் நல்லடக்கத்திலும் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அவர்களுக்கும் பொறுமையையும், மன தைரியத்தையும் வழங்குவானாக! மர்ஹூம் அவர்களோடு மக்ஃபிரத் மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக!

அடுத்த ஜனாஸா லாஹூரைச் சேர்ந்த இஹ்ஸான் அஹ்மத் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ஷஃப்கத் மஹ்மூத் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். ஜூலை 27 அன்று தமது 35 வது வயதில் கொரோனா வைரஸ் காரணமாக இவர்களின் வஃபாத் நிகழ்ந்தது. اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَیۡهِ رَاجِعُوۡنَ

இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான குஜ்ராத் மாவட்டத்தின் கோல்கி பகுதியைச் சேர்ந்த ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் அஜ்மல் சாஹிப் அவர்களின் மகன்வழி பேரராவார்கள். குஜ்ரான்வாலாவைச் சேர்ந்த இர்ஷாத் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகள்வழி பேரராவார்கள். கடந்த இரு வருடங்கள் இவர்களுக்கு லாஹூரில் உள்ள சனா டவுண் வட்டத்தில் சத்ர் ஜமாஅத்தாகப் பணியாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. இது மட்டுமின்றி டெல்லி கேட் அமாரத்தில் நவ் முபாயீன் செயலராகப் பணியாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. தப்லீக் செய்வதற்கு அளவற்ற ஆர்வம் இருந்தது. இறைவன் அருளால் இவர்களுக்கு 8 பேரை பைஅத் செய்ய வைப்பதற்கான நற்பாக்கியமும் கிடைக்கப் பெற்றது.

பின்விட்டுச் சென்றவர்களில், துணைவியார் மட்டுமின்றி இரண்டு மகன்கள் அன்பிற்குரிய ஹனான் அஹ்மது மஸ்ரூர் 6 வயது, அன்பிற்குரிய முபீன் அஹ்மத் தாஹிர் 2 வயது மற்றும் ஒரு மகள் அன்பிற்குரிய சாயிராஹ் அஹ்மத் ஆகியோர் மட்டுமின்றி, தந்தையார், தாயார், 3 சகோதரர்கள் மற்றும் 2 சகோதரிகளும் உள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் பொறுமையையும், மன தைரியத்தையும் வழங்குவானாக! இந்தப் பிள்ளைகளுக்கு தானே பாதுகாவலனாக இருப்பானாக! அவர்களுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய ரியாஸுத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்களின் சிறிய மகனாவார்கள். 27 மே அன்று வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَیۡهِ رَاجِعُوۡنَ

இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மியான் முஹம்மத் சித்தீக் சாஹிப் அவர்களின் கொள்ளுப் பேரரும், ஹஸ்ரத் மியான் இமாமுத்தீன் சாஹிப் ஸிக்(ஹ்)வானி அவர்களின் மகன்வழி பேரரும், ஹஸ்ரத் காஜா உபைதுல்லாஹ் சாஹிப் அவர்களின் மகள்வழி பேரரும், ஹஸ்ரத் மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் அவர்களின் மகனுமாவார்கள். இவர்கள் அனைவரும் சஹாபாவாக இருந்தனர். மர்ஹூம் மூஸி ஆவார்கள். பின்விட்டுச் சென்றவர்களில், இரண்டு மகள்களும் ஒரு மகனுமிருக்கிறார். அல்லாஹ் இவர்களின் பிள்ளைகளுக்குப் பொறுமையையும் மன தைரியத்தையும் வழங்குவானாக!

இவர்களின் துணைவியார் முன்னரே வஃபாத் ஆகிவிட்டார்கள். மர்ஹூம் அவர்களோடு மக்ஃபிரத் மற்றும் கருணையோடு நடந்து கொள்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக! இவர்களின் சகோதரர் முனீருத்தீன் ஷம்ஸ் சாஹிப் கூறுகின்றார்கள்: மர்ஹூம் பல நற்பண்புகளுக்கு சொந்தக்காராக இருந்தார்கள். தொழுகைகளைப் பேணி வந்தார்கள். எப்பொழுதும் பிள்ளைகளுக்குத் தொழுகை குறித்து வலியுறுத்தி வந்தார்கள். கிலாஃபத்தோடு அளவற்ற அன்பு இருந்தது. வீட்டில் எப்பொழுதும் கிலாஃபத்தோடு இணைந்திருக்க வேண்டும் என்ற பேச்சு இருந்து வந்தது. இங்கு நோய்வாய்ப்பட்டிருந்தபோதிலும் மிகவும் பொறுமையோடு மன தைரியத்தோடும் மகிழ்ச்சியான இயல்போடும் உரையாடினார்கள். கவலை இருந்ததென்றால் தமது பிள்ளைகள் தொடர்பாக இருந்தேயேன்றி, தம்மைப் பற்றி எந்தக் கவலையும் இருக்கவில்லை. இவர்கள் தொடர்பாக அனைவரின் கருத்து என்னவென்றால், எப்பொழுதும் எந்நிலையிலும் புன்சிரித்துக் கொண்டேயிருத்தல், எல்லாருடனும் பழகுதல் மற்றும் சுக துக்கங்களில் உடனிருத்தல் ஆகியவை இவர்களின் சிறப்புகளாக இருந்தன. அல்லாஹ் மர்ஹூமுடன் மக்ஃபிரத் மற்றும் கருணையோடு நடந்து கொண்டிருப்பானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக!

(தமிழில்: மவ்லவி அதாவுல் முஃனீ)

......☆......☆......☆......

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், அன்னாரின் மருமகனுமாகிய ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 டிசம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் நற்குறிப்பு சென்று கொண்டிருந்தது. இன்றும் அது தொடரும். இனி வரும் சில குத்பாக்களிலும் தொடரும். இன்ஷா அல்லாஹ். உஹது போரில், இப்னு கமிய்யா ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களை தான் ஷஹீதாக்கியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஷஹீதாக்கி விட்டதாகக் கருதினான். எனவே அவன் குரைஷிகளிடம் திரும்பிச் சென்று, நான் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்து விட்டேன் என்று கூறினான். ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஷஹீதான பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கொடியை ஒப்படைத்து விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஏனைய முஸ்லிம்களும் போரிட்டனர்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா பக்கம் 529 கஸ்வா உஹது – 2001 ஆம் ஆண்டு பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகிறது. உஹது போரில், இணை வைப்பாளர்களின் கொடியேந்துபவனான தல்ஹா பின் அபீ தல்ஹா, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை போருக்கு அழைத்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முன்னோக்கி சென்று எந்த அளவு வாள் வீசினார்கள் என்றால், அவன் தரையில் விழுந்து துடிக்க ஆரம்பித்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நிராகரிப்பாளர்களின் கொடியந்தேந்துபவர்களை, ஒருவர் பின் ஒருவராக தன் வாளுக்கு இரையாக்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிராகரிப்பாளர்களின் ஒரு கூட்டத்தைப் பார்த்து அவர்கள் மீது தாக்குதல் தொடுக்குமாறு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அம்ர் பின் அப்தில்லாஹ் ஜம்யீயைக் கொன்று அவர்களைச் சிதறடித்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிராகரிப்பாளர்களின் மற்றொரு படைப் பிரிவின் மீது தாக்குதல் தொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஷேய்பா பின் மாலிக்கை அழித்தபோது, ஹஸ்ரத் ஜிப்ரில் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நிச்சயமாக அலீ அனுதாபத்திற்குரியவர் என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் என்னைச் சார்ந்தவர்; நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைச் சேர்ந்தவன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள், நான் உங்கள் இருவரைச் சேர்ந்தவன் என்று கூறினார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 3 பக்கம் 68 – 2002 ஆம் ஆண்டு பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகிலிருந்து மக்கள் விலகிச் சென்று விட்டபோது, நான் ஷஹீதுகளின் உடல்களை பார்க்க ஆரம்பித்தபோது, அவர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காணப் பெறவில்லை. அப்போது நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓடக்கூடியவர்களாகவும் இருக்கவில்லை; நான் அவர்களை ஷஹீதுகளிலும் காணப் பெறவில்லை. ஆனால் அல்லாஹ் நம் மீது கோபமடைந்து தனது நபியை எழுப்பி விட்டான். ஆக நான் கொல்லப்படும் வரை போரிடுவதே இப்பொழுது எனக்கு நல்லது என்று கூறினேன். பிகு நான் எனது வாளின் உறையைக் கிழித்தெறிந்து விட்டு, காஃபிர்களின் மீது தாக்குதல் தொடுத்தேன். அவர்கள் இங்குமங்குமாகச் சிதறி ஓடி விட்டனர். அப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நடுவில் இருப்பதைப் பார்த்தேன்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 94 – 2003 ஆம் ஆண்டு பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது குழந்தைப் பருவத்திலிருந்து துவங்கி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது தோற்றத்தை வெளிப்படுத்தி வந்த நேசம் மற்றும் விசுவாசத்தின் கதையாகும். உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக ஓர் அறிவிப்பு இருக்கிறது. ஹஸ்ரத் சஹ்ல் பின் சஅத் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காயங்கள் தொடர்பாகக் கேட்கப்பட்டபோது அவர்கள் கூறினார்கள்: என்னிடம் கேட்கிறீர்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காயத்தை யார் கழுவினார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதாவது இந்தக் காட்சிகள் எல்லாம் என் கண் முன்னே இருக்கின்றன. யார் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள்? என்ன மருந்து போடப்பட்டது என்பதெல்லாம் எனக்கு தெரியும்.

ஹஸ்ரத் சஹ்ல் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஃபாத்திமான (ரலி) அவர்கள் காயங்களைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கேடயத்தால் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். தண்ணீர் ரத்தத்தை இன்னும் அதிகமாக வெளியேற்றுவதை ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் பார்த்தபோது, அவர்கள் சாக்குப் பையின் ஒரு துண்டை எடுத்து அதை எரித்து அவற்றுடன் ஒட்டி வைத்து விட்டார்கள். அதன் மூலம் ரத்தம் நின்று விட்டது. அந்நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன் பல்லும் உடைந்து விட்டது. அன்னாரின் முகம் காயமுற்றது. அன்னாரின் தலைக்கவசம் அன்னாரின் தலையில் உடைந்து இருந்து விட்டது. (சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4075)

உஹது போரில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு 16 காயங்கள் ஏற்பட்டதாக ஹஸ்ரத் சயீத் பின் முஸய்யப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 93 – 2003 ஆம் ஆண்டு பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்களின் கஷ்டங்களுக்குக் கீழ் அருட்களின் கருவூலங்கள் மறைந்துள்ளன என்ற கருத்தை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்கள். ஆக இந்தக் கருத்தை எடுத்துரைத்தவாறு அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் உஹது போரிலிருந்து திரும்பி வந்து ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் தமது வாளைக் கொடுத்தார்கள். மேலும், இதைக் கழுவுங்கள். இன்று இந்த வாள் நிறைய வேலை செய்திருக்கிறது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் இந்தக் கூற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அலியே! உமது வாள் மட்டுமே செயலாற்றவில்லை. உமது பல சகோதரர்களின் வாள்களும் திறமையை வெளிப்படுத்தியுள்ளன.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேலும் 6,7 சஹாபாக்களின் பெயர்களை எடுத்துக் கூறியவாறு, அவர்களின் வாள்கள் உமது வாளுக்கு சளைத்தவையாக இருக்கவில்லை என்று கூறினார்கள்.

(மஸாயிப் கே நீசே பரகதூன் கே கஸானே மஃபீ ஹோதே ஹேன்,

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டால், அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் எந்த ஓர் அடையாளத்தைக் காணும் போதும் (அதனை) ஏளனமாகக் கருதுகின்றனர். (37:14,15)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

அன்வாருல் உலூம் தொகுதி 19 பக்கம் 59)

பிறகு அதே கஷ்டங்களைக் கடந்தவாறு இறுதியில் அந்த மக்களுக்கு வெற்றி கிடைத்தது என்று கூறினார்கள்.

அகழ்ப் போர் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஷவ்வாலில் நடைபெற்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் காஃபிர்களின் படை மதீனாவை முற்றுகையிட்டிருந்தபோது, அவர்களின் தலைவர்கள் ஒன்றிணைந்து தாக்குவோம் என்ற விஷயத்தில் ஒருமித்தனர். அவர்கள் தமது குதிரைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் சஹாபிகள் வரை சென்றடைய வைக்கக்கூடிய குறுகிய இடத்தை அகழியில் தேடலானார்கள். ஆனால் அவர்களுக்கு எந்த இடமும் கிடைக்கவில்லை. இது எத்தகைய திட்டம் என்றால், இதை இன்று வரை அரபு நாட்டில் யாரும் மேற்கொள்ளவில்லை என்று அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு பாரசீக நபர் இருக்கிறார். அவரே அன்னாருக்கு இந்த ஆலோசனையைக் கொடுத்தார் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது. இது அவருடைய திட்டம்தான் என்று அவர்கள் கூறினார்கள். (அதாவது காஃபிர்கள் கூறினார்கள்). பிறகு அவர்கள் எத்தகைய நெருக்கடியான ஓரிடத்தை அடைந்தார்கள் என்றால் அதைப் பற்றி முஸ்லிம்கள் கவனமற்றிருந்தார்கள். ஆக, இக்ரிமா பின் அபீ ஜஹல், நவ்ஃபல் பின் அப்தில்லாஹ், ஸரார் பின் கத்தாப், ஹுபைரா பின் அபீ வஹப் மற்றும் அம்ர் பின் அப்தே வத் ஆகியோர் அவ்விடத்தின் வழியாக அகழியைக் கடந்தார்கள். அம்ர் பின் அப்தே வத் சண்டையிட அழைத்தவாறு இந்தக் கவிதையைப் பாடலானான்:

وَلَقَدْ بُحِحْتُ مِنَ النِّدَاءِ لِجَمْعِهِمْ هَلْ مِنْ مُبَارِزْ

அதாவது போட்டியிட யாராவது முன்வருவாரா? என்று அழைத்து அழைத்து எனது தொண்டையே கட்டிக் கொண்டது. இதற்கு பதில் கூறுவதாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இந்தக் கவிதை வரிகளைப் பாடினார்கள்:

لَا تَعْجَلَنَّ فَقَدْ اَتَاكَ مُجِيْبُ صَوْتِكَ غَيْرُ عَاجِزْ
فِيْ نِيَّةٍ وَ بَصِيْرَةٍ وَالصِّدْقُ مَنْجِى كُلِّ فَائِزْ
اِنِّىْ لَاَرْجُوْ اَنْ اُقِيْمَ عَلَيْكَ نَائِحَةَ الْجَنَائِزْ
مِنْ ضَرْبَةٍ نَجْلَاءَ يَبْقَى ذِكْرُهَا عِنْدَ الْهَزَاهِزْ

நீ ஒருபோதும் அவசரப்படாதே! உனது குரலுக்குப் பதில் கொடுக்கக் கூடியவர் உன்னிடம் வந்து விட்டார். அவர் இயலாமையையும், பலவீனத்தையும் வெளிப்படுத்தக் கூடியவரல்ல. மன உறுதியுடனும், முழுமையான முன்னோக்குப் பார்வையுடனும் மேலும் உறுதியான பாதத்துடனும் போர்க்களத்தில் எதிர்த்துத் தாக்குப் பிடித்து நிற்பதே வெற்றி பெறக்கூடிய ஒவ்வொருவரின் ஈடேற்றத்திற்கான வழியாகும். நான், போர்களில் அதைப் பற்றி சர்ச்சை இருக்கும் அளவு பெரிய காயத்தை ஏற்படுத்தி, மையத்துகளில் ஒப்பாரி வைக்கக்கூடிய பெண்களை உனக்காக ஒன்று திரட்டி விடுவேன். ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் இவனோடு போரிடச் செல்வேன் என்று கூறியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்குத் தமது வாளைக் கொடுத்தார்கள். பிறகு, தலைபாகையைக் கட்டிக் கொண்டு இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! அவனுக்கு அதாவது அம்ர் பின் அப்தே வத்துக்கு எதிரில் இவருக்கு உதவுவாயாக.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனோடு போரிட முன் சென்றார்கள். இருவரும் ஒருவரோடு ஒருவர் போரிட ஒருவர் மற்றவருக்கு அருகில் சென்றார்கள். அவர்கள் இருவருக்கும் மத்தியில் புழுதி பறந்தது. போரிட சென்றபோது மண் புழுதி பறந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டு, அல்லாஹு அக்பர் என்று முழக்கமிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள் என்று நாங்கள் அறிந்து கொண்டோம். அவனது கூட்டாளிகள் புறமுதுகு காட்டி ஓடி விட்டார்கள். தமது குதிரைகள் காரணமாக உயிரைக் காப்பாற்றிக் கொள்வதில் வென்று விட்டனர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 573)

இதை மேற்கொண்டு விளக்கியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அம்ர் ஒரு பெயர் போன வாள் வீச்சாளராக இருந்தான். தனது வீரத்தின் காரணமாகத் தனியாகவே ஆயிரம் போர் வீரர்களுக்கு நிகராகக் கருதப்பட்டான். அவன் பத்ர் போரில் தோற்று இழப்படைந்து திரும்பிச் சென்றான் என்பதால், அவனது உள்ளம் முஸ்லிம்களுக்கு எதிராகக் காழ்ப்புணர்ச்சியாலும், பழிவாங்கும் உணர்வுகளாலும் நிறைந்திருந்தது. அவன் களத்துக்கு வந்தவுடனே மிகவும் அகம்பாவத் தோரணையில், அணியை விட்டு போரிட முன் வருமாறு அழைத்தான். சில சஹாபா அவனோடு சண்டையிடுவதைத் தவிர்த்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதியோடு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனோடு போரிட முன் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்குத் தமது வாளைக் கொடுத்து அவர்களுக்காக துஆ செய்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முன்னேறிச் சென்று அம்ரிடம், குரைஷியர்களில் யாராவது உன்னிடம் இரு விஷயங்களைக் கேட்டால், நீ அவற்றில் ஒன்றைக் கண்டிப்பாக ஏற்றுக் கொள்வதாக உறுதிமொழி எடுத்துள்ளதாக நான் கேள்விப்பட்டேன் என்று கூறினார்கள். அதற்கு அம்ர், ஆம்! என்று சொன்னான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அப்படியென்றால் நான் உன்னிடம் முதல் விஷயமாக, நீ முஸ்லிம் ஆகிவிடு! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டு இறை அருட்களுக்கு வாரிசாகி விடு என்று கூறுகிறேன் என்றார்கள். அதற்கு அம்ர், இது முடியாது என்று சொன்னான்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இதற்கு சம்மதமில்லை என்றால், பிறகு வா! என்னோடு சண்டையிட ஆயத்தமாகி விடு என்று கூறினார்கள். இதைக்கேட்டு அம்ர் சிரிக்க ஆரம்பித்தான். என்னிடம் ஒருவர் இந்தச் சொற்களைக் கூற முடியும் என்று நான் நினைத்துப் பார்க்கவில்லை என்று சொன்னான். பிறகு அவன் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பெயரையும், பரம்பரையையும் பற்றிக் கேட்டான். அவர்கள் கூறிய பிறகு, சகோதரனின் மகனே! நீ இப்போது சிறுவன்; நான் உனது ரத்தத்தைச் சிந்த வைக்க விரும்பவில்லை; உன்னுடைய பெரியவர்களில் யாரையாவது அனுப்பு என்றான். அதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பதிலளித்தவாறு, நீ எனது ரத்தத்தை சிந்த வைக்க விரும்பவில்லை; ஆனால் எனக்கு உன்னுடைய ரத்தத்தைச் சிந்த வைப்பதில் தயக்கமில்லை என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட அம்ர் உத்வேகத்தில் குருடனாகி தனது குதிரையிலிருந்து குதித்தான். குதிரையை வைத்துத் திருப்பிச் செல்வதற்குக் கூட வழி இருக்கக் கூடாது என்பதற்காக அதன் கால்களை வெட்டி அதைக் கீழே விழச் செய்து விட்டான். பிறகு ஒரு தீப் பிழம்பைப் போன்று பித்து பிடித்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை நோக்கிச் சென்றான். மேலும் எவ்வளவு வேகமாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மீது வாள் வீசினான் என்றால் அது அவர்களின் கேடயத்தைக் குடைந்தவாறு அவர்களின் நெற்றியில் பட்டது. ஓரளவு அவர்களின் நெற்றியைக் காயப்படுத்தியும் விட்டது. ஆனால் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அல்லாஹு அக்பர் என்று முழக்கமிட்டவாறு, எத்தகைய வாள் வீச்சை செய்தார்கள் என்றால் அவனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போனது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் வாள் அவனது தோளை வெட்டியவாறு கீழே இறங்கி விட்டது. அம்ர் துடிதுடித்து விழுந்து உயிரை விட்டு விட்டான்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 588,589)

அம்ர் பின் அப்தே வத் கொலையுண்ட பிறகு, அவனது சடலத்தை 10,000 திர்ஹம் கொடுத்து நாங்கள் வாங்கிக் கொள்வோம் என்ற செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு காஃபிர்கள் அனுப்பியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இதை எடுத்துச் செல்லுங்கள். நாங்கள் மரணித்தவர்களை விற்று சம்பாதிப்பதில்லை என்று கூறினார்கள்.

(அல்பதாயத்து வந்நஹாஇய்யா தொகுதி 2 பக்கம் 116 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் பரா பின் ஆஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா மக்களுடன் உடன்படிக்கை செய்தபோது, ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் அவர்களுக்கு மத்தியில் ஒரு மடலை எழுதினார்கள். அதில் அன்னாரின் பெயரை, முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) என்று எழுதினார்கள். இணைவைப்பவர்கள், முஹம்மத்

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களாகிய நம் அடியார்களைக் குறித்து நம் தீர்ப்பு ஏற்கனவே நிகழ்ந்து விட்டது. நிச்சயமாக அவர்களுக்கே உதவி அளிக்கப்படும். 37:172,173)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களைத் தவிர, (அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை அளிக்கப்படுவதில்லை). (37:41)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

ரஸூலுல்லாஹ் என்று எழுதாதீர்கள். அவ்வாறு ரஸூலாக இருந்தால் நாங்கள் அவர்களோடு சண்டையிட்டிருக்க மாட்டோம என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், அதை அழித்து விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், நான் இதை அழிக்கக் கூடியவனல்ல என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கரங்களால் அழித்து விட்டார்கள்.

மேலும், அந்த மக்களுடன் பின்வரும் நிபந்தனைகளின்படி சமாதானம் செய்து கொண்டார்கள்: அன்னாரும் அன்னாரின் சஹாபிகளும் மூன்று நாட்கள் மக்காவில் இருப்பார்கள். அவர்கள் தமது ஆயுதங்களை ஜுலூபானில் வைத்து விட்டு நுழைவார்கள். ஜுலூபான் என்றால் என்ன? என்று மக்கள் கேட்டனர். அறிவிப்பாளர், உறையுடன் வாள் வைக்கப்படும் பை என்று கூறினார். (சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸுலஹ்.... ஹதீஸ் எண் 2698)

இந்தச் சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சற்று விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஹுதைபிய்யா உடன்படிக்கை சபையில் அமர்ந்திருந்தபோது, காஃபிர்கள் சமாதானத்துக்கான நிபந்தனைகளை முன் வைத்துக் கொண்டிருந்தார்கள். சஹாபிகள் தமது உள்ளங்களில் நெருப்பை ஏந்தியவாறு அமர்ந்திருந்தார்கள். காஃபிர்களின் தரப்பிலிருந்து 20 ஆண்டுகளாக தங்கள் மீது இழைக்கப்பட்டு வந்த அந்த அநீதிகளின் வெப்பத்தால், அவர்களின் நெஞ்சங்கள் எரிந்து கொண்டிருந்தன. அவர்களின் வாள்கள் உறையிலிருந்து வெளி வந்திருந்தன. அவர்கள் எவ்வாறாவது சந்தர்ப்பம் கிடைத்தால், அம்மக்கள் இஸ்லாத்தின் மீது இழைத்த அந்த அநீதிகளுக்குப் பழிவாங்கலாம் என்று நாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காஃபிர்கள் கூறுவதைக் கேட்டார்கள். அவர்கள் தரப்பிலிருந்து, வாருங்கள்! நாம் பரஸ்பரம் சமாதானம் செய்து கொள்வோம் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிக நல்லது! நாம் சமாதானம் செய்து கொள்வோம் என்று கூறினார்கள்.

அதற்கு அவர்கள், இந்த வருடம் நீங்கள் உம்ரா செய்யக்கூடாது என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிக நல்லது! இந்த வருடம் நாங்கள் உம்ரா செய்ய மாட்டோம் என்று கூறினார்கள். மேலும் அவர்கள், அடுத்த வருடம் நீங்கள் உம்ரா செய்ய வரும்போது மூன்று நாட்களுக்கு மேல் மக்காவில் தங்கக்கூடாது என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிக நல்லது! எனக்கு இந்த நிபந்தனையும் சம்மதம் என்று கூறினார்கள். பிறகு அவர்கள், நீங்கள் ஆயுதம் ஏந்தி மக்காவில் நுழைய உங்களுக்கு அனுமதி இருக்காது என்று கூறினார்கள். அதற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிக நல்லது! நாங்கள் ஆயுதம் ஏந்தி மக்காவில் நுழைய மாட்டோம் என்று கூறினார்கள்.

சமாதான உடன்படிக்கைத் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சஹாபிகளின் உள்ளங்கள் உள்ளுக்குள்ளேயே உத்வேகத்தால் பொங்கிக் கொண்டிருந்தன. ஆனால் எதுவும் செய்ய முடியாமல் இருந்தனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சமாதான மடலை எழுத நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் இந்த உடன்படிக்கையை எழுத ஆரம்பித்தபோது, இந்த உடன்படிக்கை ஒரு புறம் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களின் தோழர்கள் தரப்பிலிருந்தும், மறுபுறம் மக்காவின் இன்ன இன்ன தலைவர்கள் மற்றும் மக்காவாசிகள் தரப்பிலிருந்தும் இருக்கிறது என்று எழுதினார்கள். இதைப்பார்த்து காஃபிர்கள் கொதித்தெழுந்தனர். அவர்கள், எங்களால் இந்தச் சொற்களைப் பொறுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் நாங்கள் முஹம்மதை (ஸல்) ரஸூலுல்லாஹ்வாக ஏற்றுக் கொள்வதில்லை. ஏற்றுக் கொண்டிருந்தால் எதற்காக அவர்களுடன் சண்டையிடப் போகிறோம்? நாங்கள் அவர்களோடு முஹம்மத் பின் அப்தில்லாஹ் என்ற அந்தஸ்திலேயே உடன்படிக்கை செய்கிறோம். எனவே இந்தச் சொற்கள், இந்த உடன்படிக்கையில் எழுதப்படக்கூடாது என்று கூறினார்கள்.

அப்பொழுது, சஹாபிகளின் ஆதங்கத்திற்கு எல்லையில்லாமல் இருந்தது. அவர்கள் கோபத்தில் துடிக்க ஆரம்பித்தனர். அவர்கள், இப்பொழுது அல்லாஹ் இன்னொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி விட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் (காஃபிர்களின்) கூற்றை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்; நமக்கு அவர்களுடன் சண்டையிட்டு நமது மனக்குறையைத் தீர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்து விடும் என்று நினைத்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர்கள் சரியாகச் சொல்கிறார்கள்; உடன்படிக்கையிலிருந்த ரஸூலுல்லாஹ் எனும் சொல்லை அழித்து விட வேண்டும் என்று கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்தச் சொல்லை அழித்து விடுங்கள் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஆனால் கட்டுப்படுதல் மற்றும் கீழ்ப்படிதலின் மிக மேலான முன்மாதிரியாகத் திகழ்ந்த ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உள்ளமும் நடுங்க ஆரம்பித்தது. அவர்களின் கண்களில் கண்ணீர் வந்து விட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னால் இந்தச் சொல்லை அழிக்க முடியாது என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், காட்டுங்கள்; காகிதத்தை என்னிடம் தாருங்கள் என்று கூறினார்கள். காகிதத்தைப் பெற்று ரஸூலுல்லாஹ் எனும் சொல்லைத் தமது கரங்களால் அன்னார் அழித்து விட்டார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 20 பக்கம் 379–381 குத்பா ஜுமுஆ 8 செப்டம்பர் 1939)

ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு முஹர்ரம் மற்றும் ஸஃபர் மாதத்தில் நடைபெற்ற கைபர் போர் தொடர்பாக சஹீஹ் முஸ்லிமின் ஒரு நீளமான அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் சலமா பின் அக்வா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் கைபரை அடைந்தபோது, அவர்களின் தலைவனான மர்ஹப் தனது வாளைச் சுழற்றியவாறு முன் வந்து, போர்கள் கொழுந்து விட்டெரிந்தவாறு வரும்போது, நான் ஆயுதமேந்திய வீரன், அனுபவசாலி மர்ஹப் என்பதை கைபர் அறியும் என்று கூறிக் கொண்டிருந்தான். அதாவது எனது வீரத்தைப் பற்றித் தெரிய வரும் என்றான். அறிவிப்பாளர் கூறுகிறார்: அவனை எதிர்த்துப் போரிட எனது தந்தையின் சகோதரர் ஆமிர் முன் சென்றார்கள். அவர்கள், நான் ஆயுதமேந்திய வீரன்; அபாயங்களில் தன்னை இட்டுக் கொள்ளக்கூடிய ஆமிர் ஆவேன் என்பதை கைபர் அறியும் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: இருவரும் வாள் வீசினார்கள். மர்ஹன் வாள் ஆமிர் அவர்களின் கேடயத்தில் பட்டது. ஆமிர் அவன் மீது கீழ் பக்கமாக வாள் வீசினார்கள். அவர்களின் வாளே அவர்கள் மீது வந்து பட்டது. அது அவர்களின் நரம்பைத் துண்டித்து விட்டது. அவர்கள் அதனாலேயே ஷஹீதாகி விட்டார்கள். சலமா கூறுகின்றார்கள்: நான் புறப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில சஹாபிகள், ஆமிரின் செயல் வீணாகி விட்டது; அவர் தன்னைத்தானே கொன்று விட்டார் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் அழுதவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஆமிரின் செயல் வீணாகி விட்டதா? என்று கேட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவ்வாறு யார் கூறினார்கள்? என்று கேட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: தங்களின் சில சஹாபிகள் என்று நான் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், யார் இதைக் கூறினார்களோ, அவர்கள் தவறாகக் கூறியுள்ளார்கள். அவருக்கோ (ஆமிருக்கு) இரட்டை வெகுமதி கிடைக்கும் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிம் அனுப்பினார்கள். அவர்களின் கண்கள் தளர்ந்திருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் அல்லாஹ்வையும், அவனது தூதரும் நேசிக்கக்கூடிய நபருக்குக் கொடியைக் கொடுப்பேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் சென்றேன். அவர்களின் கண்கள் தளர்ந்திருந்தன. அதாவது, நோயினால் கண்கள் பொங்கிப் போயிருந்தன; வீங்கியிருந்தன. அவர்களை உடன் அழைத்துக் கொண்டு நடந்தேன்; எதுவரையெனில், நான் அவர்களை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சென்றடைந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் கண்களில் தமது உமிழ் நீரைத் தடவினார்கள். அவை சரியாகி விட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்குக் கொடியைக் கொடுத்தார்கள். மர்ஹப் முன் வந்து, போர்கள் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும்போது, நான் ஆயுதமேந்திய வீரன்; அனுபவசாலி மர்ஹப் ஆவேன் என்பதை கைபர் அறியும் என்றான்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

நீர் சிறிது காலம் அவர்களை விட்டு விலகி விடுவீராக. மேலும் நீர் நன்கு பார்த்துக் கொண்டிருப்பீராக. நிச்சயமாக அவர்களும் (தங்கள் முடிவைக்) கண்டுகொள்வர். (37:179,180)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களுக்கு என்றென்றும் சாந்தி நிலவுவதாக. உலகங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (37:182,183)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381 58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 28 January 2021 Issue No. 4

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது தாயார் எனக்கு ஹைதர் என்று பெயரிட்டார்கள். நான் காடுகளில் வசிக்கும் அச்சுறுத்தும் தோற்றமுடைய சிங்கத்தைப் போன்றவன்.

நான் ஒரு சாஹ் அளவுக்கு பகரமாக ஒரு சந்தரா கொடுக்கின்றேன். (ஒரு சாஹ் என்பது இரண்டரைக் கிலோ ஆகும். ஒரு சந்தரா என்பது அதை விட மிகவும் பெரிய அளவு ஆகும்)

இது ஒரு அரபி பழமொழியாகும். அதன் பொருள் ஒன்றுக்கு இரண்டாக கொடுப்பேன் என்பதாகும்.

பிறகு அறிவிப்பாளர் கூறுகிறார்: அவர்கள் மர்ஹபின் தலையில் வாள் வீசினார்கள். அதாவது இதைக்கூறிய பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மர்ஹபின் தலையில் வாள் வீசி அவனைக் கொன்று விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கைகளால் வெற்றி கிடைத்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 837)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்: கைபர் நாளன்று, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இன்று நான் இறைவனை நேசிப்பவருக்கு; மேலும் இறைவன் நேசிப்பவருக்குச் சந்தர்ப்பம் கொடுப்பேன். இறைவன் மேன்மை வழங்கியவரிடம் வாளை ஒப்படைத்து விடுவேன் என்று கூறினார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அந்த சபையில் இருந்தேன். ஒருவேளை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னைப் பார்த்து விட்டு, வாளை எனக்குக் கொடுத்து விடலாம் என்று எண்ணி, எனது தலையை உயர்த்தி வந்தேன். ஆனால் அன்னார் பார்த்து விட்டு அமைதியாக இருப்பார்கள். நான் மீண்டும் உயர்த்துவேன். அன்னார் பார்த்து விட்டு அமைதியாக இருப்பார்கள். எதுவரையெனில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்களின் கண்கள் கடுமையாகத் தளர்ந்திருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அலீயே! முன்னால் வாருங்கள். அவர்கள் அன்னாரை அடைந்தார்கள். அன்னார் தமது உமிழ் நீரை அவர்களின் கண்களில் தடவினார்கள். மேலும், அல்லாஹ் உமது கண்களுக்கு குணமளிப்பானாக! அல்லாஹ் உம்மிடம் ஒப்படைத்துள்ள இந்த வாளைப் பிடியுங்கள் என்று கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 19 பக்கம் 614 குத்பா ஜுமுஆ 2 செப்டம்பர் 1938)

இதைப் பற்றி பிறிதோர் இடத்திலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபிய்யாவிலிருந்து திரும்பி வந்ததற்கு ஏறத்தாழ 5 மாதங்களுக்குப் பிறகு மதீனாவிலிருந்து குறைந்த தூரத்திலேயே இருந்த – அதாவது எங்கிருந்து மதீனாவுக்கு எதிராக சுலபமாக சூழ்ச்சி செய்திருக்க முடியுமோ, அந்த கைபரிலிருந்து யூதர்கள் வெளியேற்றிடத் தீர்மானித்தார்கள். ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1600 சஹாபாக்களோடு கி.பி. 628 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைபரை நோக்கி பயணமானார்கள். கைபர் சுற்றிலும் கோட்டைகள் உள்ள நகரமாகும். அதன் நாலாப் புறமும் பாறைகள் மீது கோட்டைகள் அமைக்கப்பட்டிருந்தன. இத்தகைய வலுவான ஒரு நகரத்தை, இவ்வளவு குறைவான போர் வீரர்களை வைத்து வெற்றி காண்பது ஒன்றும் எளிமையான காரியமாக இருக்கவில்லை. அக்கம் பக்கத்திலிருந்த சிறு சிறு பகுதிகளோ, சிறு சிறு போர்களுக்குப் பிறகு வெற்றி பெறப்பட்டு விட்டன. ஆனால், யூதர்கள் சிறிது சிறிதாக ஒன்றிணைந்து நகரத்தின் நடுக் கோட்டைக்கு வந்து விட்ட பிறகு, அதை வெற்றி காண்பதற்கான அனைத்துத் திட்டங்களும் வீண் போயின.

ஒரு நாள் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அந்த நகரத்தின் வெற்றி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கைகளால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கூறினான். பெருமானார் (ஸல்) அவர்கள் காலை வேளையில், இன்று நான் இஸ்லாத்தின் கருப்புக் கொடியை இறைவனும், அவனுடைய தூதரும், முஸ்லிம்களும் நேசிக்கக்கூடிய நபருக்குக் கொடுப்பேன். இறைவன் அந்தக் கோட்டையின் வெற்றியை அவரது கைகளில் நிர்ணயித்துள்ளான் என்று கூறினார்கள். பிறகு அடுத்த நாள் காலையில் பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வரவழைத்து கொடியை அவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சஹாபிகளின் படையை உடன் அழைத்துக் கொண்டு கோட்டை மீது தாக்குதல் தொடுத்தார்கள். யூதர்கள் கோட்டைக்குள் அடைக்கலம் பெற்றிருந்தபொழுதிலும், அல்லாஹ் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் ஏனைய சஹாபிகளுக்கும் அந்நாளில் எவ்வளவு ஆற்றல் வழங்கினான் என்றால் மாலை வேலைக்குள் கோட்டை வெற்றி காணப்பட்டு விட்டது.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 325,326)

பிறகு மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டவாறு இதே சம்பவம் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

கைபரை வெற்றிக் கொள்வது தொடர்பான பேச்சு வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை வரவழைத்து இஸ்லாமியப் படையின் கொடியை அவர்களிடம் ஒப்படைக்க விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கண்களில் வலி ஏற்பட்டிருந்தது. இங்கு கண்களில் வலி ஏற்பட்டது பற்றிய குறிப்பும் வந்து விட்டது. கடுமையான வேதனையின் காரணமாக அவை வீங்கியிருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை இந்த நிலையில் பார்த்தபோது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், இங்கே வாருங்கள் என்று கூறினார்கள். அவர்கள் முன் வந்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் தமது உமிழ்நீரை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கண்களில் தடவினார்கள். அவர்களின் கண்கள் அதே கணம் சரியாகி விட்டன.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 398,399)

பிறகு பிறிதோர் இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குணமளிக்கும் கரத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் அருளால் சில நோயாளிகளுக்கு அசாதாரணமான முறையில் குணம் ஏற்படக்கூடிய இத்தகைய காட்சிகள் உலகில் தென்படுகின்றன. மருத்துவ வழிமுறைகள் பயன்படுத்தப்படாமல் அல்லது மருத்துவ வழிமுறைகள் பலனளிக்காத தருணங்களில் குணம் ஏற்படுகிறது. ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளில், இதுபோன்ற குணம் கிடைத்ததற்கான ஓர் உதாரணம் கைபர் போரின்போது கிடைக்கப் பெறுகிறது. கைபர் போரின்போது ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடம், நான் யாரிடம் கொடியைக் கொடுக்கிறேனோ அவருடைய கைகளால் கைபர் வெற்றி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அந்த நேரம் வந்தபோது, ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொடியை என்னிடமே கொடுத்து விடலாம் என்று எண்ணி நான் கழுத்தை உயர்த்தி பார்க்க ஆரம்பித்தேன். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னை இந்தப் பணிக்காக நியமிக்கவில்லை. இதற்குள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்களின் கண்கள் கடுமையாகத் தளர்ந்திருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கண்களில் தமது உமிழ்நீரைத் தடவினார்கள். உடனடியாக கண்கள் சரியாகிவிட்டன. அன்னார் அவர்களின் கைகளில் கொடியைக் கொடுத்து கைபரை வெற்றி காணும் பணியை அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

(ஹஸ்தி பாரி தஆலா, அன்வாருல் உலூம் தொகுதி 6 பக்கம் 327)

*(தொடரும்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad